DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1445
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 15, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# தமிழர் தாயகம் இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் போது உலகத் தமிழர் பேரவை பிடில் வாசிக்கின்றதா?

GLOBAL TAMIL FORUM
உலகத் தமிழர் பேரவை

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கமாகக் கொண்டு செயற்படும் பல அமைப்புகள் மத்தியில், குளோபல் தமிழ் ∴போரம் **(GTF)** எனப்படும் உலகத் தமிழர் பேரவை (உ.த.பே) வெவ்வேறு புத்த அமைப்புக்களைச் சேர்ந்த மூத்த புத்த பிக்குகள் கொண்ட இலங்கைக்கான "சிறந்த இலங்கை சங்க மன்றத்தை" சந்தித்ததானது, பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் படிப்படியாக தங்களுக்கு உரித்தான அனைத்தையும் இழந்து வருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் வரலாற்றில் பௌத்த மதகுருமார்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இதன் காரணமாகவே, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் பொருட்டு தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தாமல் இரத்து செய்யப்பட்டன.

(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

# கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வருடாந்த மாநாடு – விருது வழங்கும் விழாவில் 'தந்தை செல்வா' விருது சமூக உணர்வாளர் ராஜ் குணநாதனுக்கு வழங்கப்பெற்றது

உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் அங்கத்தவர்களையும் அமைச்சர்களையும் பிரதமரையும் கொண்டு இயங்கிவரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 2023 ஆண்டிற்குரிய வருடாந்த மாநாடும் விருது வழங்கலும் கனடா ஸ்காபுறோ நகரில் "ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் " மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் உறுப்பினரும் நீண்ட கால அரசியல் செயற்பாட்டாருமான திரு நிமால் விநாயகமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார்.



விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது மூன்று சமூகப் பணியாளர்களுக்கும் ஒரு சர்வதேச அமைப்புக்கும் விருதுகள் வழங்கப்பெற்றன. திருவாளர்கள் ராஜ் குணநாதன். பேராசிரியர் முருகேசு சிவபாலன், பேராசிரியர் இஸல்டீன் அபுலாஸ் ஆகியோருக்கும் சர்வதேச "பேர்ள்" அமைப்பிற்கும் வழங்கப்பெற்றன. இவற்றுல் கனடா வாழ் திரு ராஜ் குணநாதனுக்கு "தந்தை செல்வா ஞாபகார்த்த கௌரவ விருது" வழங்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கம்)

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage.
BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com


GRAND
OPENING
FRIDAY. DECEMBER 15, 2023
12:30 PM onwards until 8:00 PM
Ajax நகரில் உங்களை மகிழ்விக்கும்
மாபெரும் திறப்பு விழா
விபி தங்கநகை மாளிகை
நண்பர்கள், அன்பர்கள்
மற்றும் வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்!
JEWELLERY
Unit #6 - 1801 Hardwood Ave North, Ajax, ON L1T 0K8
(905) 683-4653
www.vpjewellery.ca


19th January Friday 2024 7PM
செந்தில் குமரனின் நிவாரணம் அமைப்பு பெருமையுடன் வழங்கும்
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
SCAN ME
MGR 107
மாபெரும் இன்னிசை விருந்து
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
அவர்களின் அட்டகாசமான பாடல்களுடன், அவரின் சில அபிமான நடிகர்களின் முத்தான பாடல்களையும்
பாடி உங்களை மகிழ்விக்க ஆவலோடு உள்ளோம். வருகை தந்து உயிர்கள் காத்திடுவீர்
Life-Saving Surgeries | Hospital Equipments | Livelihood Assistance | Mobile Medical Clinic
416-200-7652, 647-526-7652
www.Nivaranam.com
$30, $60, $100
திரட்டப்படும் நிதி முழுவதும் தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இருதய – சிறுநீரக் சத்திரசிகிச்சைகளுக்காகவும், மருத்துவ கட்டுமானங்களுக்காகவும்,
கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்காகவும், வாழ்வாதர உதவிகளுக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
100% of proceeds will be used for projects without any expenses deducted
முழு நிதி விபரங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் | Thanks to all our Media Partners
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
FREE PARKING
tvi HD
LANKASRI
IBC தமிழ்
Cineulagam
Our Digital Partners
east
CMR
உதயன்
குரல்

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தனி நபர்களின் செயற்பாடுகள் தமிழர்களின் 'தலைவிதியை' தீர்மானிப்பதா?

'உலகத் தமிழர் பேரவை' என்ற பெயரோடு இயங்கிவருகின்ற அமைப்பானது சில தனி நபர்களின் 'கூடாரம்' என்ற கணிப்போடுதான் இயங்கி வருகின்றது என்பது தமிழர் அரசியலில் அவதானமான பார்வை கொண்டவர்களால் நன்கு விளங்கிக்கொள்ளப்பெற்ற விடயமாகும். ஆனாலும் அந்த தனிநபர்களின் செயற்பாடுகள் கடந்த வாரம் தொடக்கம் உலகத் தமிழர்களை உணர்ச்சிக் கொந்தளிப்பிற்குள்ள தள்ளிய 'இமயமலைப் பிரகடனம்' என்ற ஒன்றோடு தான் ஆரம்பமாகியது என்று நாம் கருதி விடமுடியாது.

ஆக மூன்று தனிநபர்களினால் கையாளப்படுகின்ற 'உலகத் தமிழர் பேரவை'யிலிருந்து பல விலகிக் கொண்டாலும் அந்த மூன்று தனிநபர்களின் செயற்பாடுகள் 'எல்லை' கடந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரான்சிஸ் பாதிரியாரின் 'ஈடுபாடு' தற்போது சற்று மறைந்துள்ளதாக காட்டப்பட்டாலும் இங்கிலாந்து வாழ் சுரேன் என்பவரே தற்போது முன்வரிசைக்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்டு தற்போது காட்சிகளாக விளங்கும் அதிரடியான சந்திப்புக்கள். கையளிப்புக்கள் என இலங்கைத் தலைநகரில் நடந்தேறியுள்ளன. இன்றிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னரேயே, தற்போதைய ஜனாதிபதி ரணில் அவர்கள் பிரதமராக பதவி வகித்த காலத்தில் பிரான்சிஸ் பாதிரியார் சுரேன் போன்றவர்கள் ரணில் அவர்களை புலம் பெயர் தமிழர்கள் சிலர் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. குறிப்பான ஐரோப்பிய நாடுகளில் ரணில் விக்கிரமசிங்க பயணங்கள் மேற்கொண்ட போது இந்த சந்திப்புக்கள் இடம்பெற்றன என்பதை அன்றைய காலங்களில் அறியக்கூடியதாக இருந்தது. இந்த மறைமுகமான வேலைத்திட்டங்களில் கனடாவில் இயங்கிவரும் 'கனடிய தமிழர் பேரவை'யினரும் பங்கெடுத்திருந்து தொடர்ந்து வந்த நாட்களில் இலங்கை அரசின் விருந்தினர்களாகக் கூட கொழும்பிற்கு அழைக்கப்பெற்று 'அவர்களின்' எண்ணப்படியும் விருப்பத்தின்படியும் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

இவையெல்லாம் 2009ம் ஆண்டிற்கு பின்னர்தான். இந்த புலம் பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களின் சந்திப்புக்களில் வெளிப்படை இருந்ததாக அன்று உணரப்படவில்லை. ஆனால் சந்திப்புக்கள் என்ற பெயரோடு சந்தோசமான நாட்களை அவர்கள் இலங்கைத் தலைநகரில் கழிப்பதற்கு வாய்ப்புக்கள் கிட்டியிருக்க வேண்டும்.

ஆனால் இவ்வாறான சந்திப்புக்கள் வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு அவர்கள் நாளாந்த வாழ்வில் எவ்வித மாற்றங்களையோ அன்றி முன்னேற்றங்களையோ ஏற்படுத்தவில்லை. இவ்வாறான கொழும்பு சந்திப்புக்களிற்கான ஏற்பாடுகளை கவனிப்பதில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கு வகித்திருந்த காரணத்தால் அவர்களில் சிலர் கனடாவில் இடம்பெற்ற சில விழாக்களில் 'விருந்தினர்களாக' வந்து போகின்ற நிகழ்ச்சி நிரல்கள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்தன. ஆனால் இவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவும் கிட்டியதாகத் தெரியவில்லை. இந்த உறுப்பினர்களை தமது வாக்குகளால் தேர்ந்தெடுத்த மக்கள் வாழ்க்கையின் அடி மட்டத்திற்கு சென்று கொண்டிருந்து அவர்களால் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வானத்தில் பறப்பதும் இறங்குவதுமாக தங்கள் பதவிக் காலத்தை களிப்போடு கழித்தார்கள். ஆனால் தற்போது அந்த பயணங்களுக்கு 'ஓய்வு' கொடுக்கப்பட்டுள்ளது போன்று காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு 'வலைப்பின்னலுக்குள்' செயற்பட்டவர்களின் சற்று வேகம் கொண்டவர்களின் முடிவாகவே கடந்த வார 'இமயமலைப் பிரகடனம்" அரங்கேறியுள்ளது

எந்தவித கலந்தாலோசனையும் இல்லாமல் ரகசியமாக வைக்கப்பட்ட 'இமயமலைப் பிரகடனம்' திடீரென தீப்பிளம்மாகத் தெரிந்த விடயமானது தமிழ் மக்களது எரியும் பிரச்சினைக்கு எண்ணை ஊற்றுவதாக உள்ளது. புலம்பெயர்ந்த நாடுகளில் செயற்பட்டு வரும் சில தமிழர் அமைப்புக்கள் அறிக்கைகள் மூலம் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர். அத்துடன் 'உலகத் தமிழர் பேரவையின்' செயற்பாடுகளுக்கும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

'இமயமலைப் பிரகடனம்' பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து பொதுவெளிக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்கு முன்னர் இந்த விடயம் தமிழர் தரப்பில் எவருடனும் ஆலோசிக்கப்படாமல் திரைமறைவில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போது ஜனாதிபதியாக விளங்கும் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு மக்கள் ஆதரவின்றி அந்த பதவியைத் தக்கவைத்துக் கொள்கின்றாரோ. அதைப்போன்றே 'உலகத் தமிழர் பேரவை' போன்ற அமைப்புக்கள் நடந்து கொண்டாலும் அவர்களின் செயற்பாடுகளை நிறுத்தும் அளவிற்கு அதன் மறுபக்கத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் இல்லை. ஆங்காங்கே அறிக்கைகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. இவ்வாறு நாட்கள் நகர்ந்து செல்லும்போது. சில நாட்களில் .'இமயமலைப் பிரகடனம்' என்பதில் பார்க்க ஆபத்தான விடயங்களை அவர்கள் கொண்டு எமது மக்கள் மீது திணிப்பதற்கும் சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு கிட்டலாம். எது எப்படி நடந்தாலும். தற்போது இடம்பெறுகின்ற காட்சிகளைப் பார்க்கும் போது. எமது மக்களும் போராளிகளும் சிந்திய இரத்தம் அர்ப்பணித்த உயிர்கள். இழந்த சொத்துக்கள் உறவுகள் அனைத்தும் எம் கண்களுக்கு முன்னாலே தகர்க்கப்படுவதை நாம் உணர்ந்து கொள்கின்றோம் கடந்த காலத்தை ஆராய்ந்து நிகழ் காலத்தை தமக்குச் சாதகமாகக் கையாளுபவர்கள். தமிழர்களின் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யவும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் முயலுவதையே 'உலகத் தமிழர் பேரவையின்' செயற்பாடுகளும் காணப்படுகின்றன. இவ்வாறாவற்றை நாம் பார்க்கும் போது இலங்கையில் சிங்கள மக்களின் செல்வாக்குகள் இல்லாத ஒரு ஜனாதிபதிக்கு புலம் பெயர் நாடுகளின் தமிழ் பேசும் 'ஏஜன்ட்கள்' உள்ளார்கள் என்பதை நினைக்கும் போது எவருக்கும் இதயங்கள் வெந்து போக வாய்ப்புக்கள் உண்டு.

கடந்த காலத்தை தனக்கு சாதகமாக கையாளும் ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்பு, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுடன் பேசுவதில் வெற்றி என்ற போர்வையில் தமிழர்களின் குரல்களை மூடி மறைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு உலகத் தமிழர் பேரவையின் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளித்துள்ளது என்று நேற்றைய அறிக்கை ஒன்றில் புலம் பெயர் அமைப்புக்களின் கூட்டுக் குழு தெரிவித்துள்ளது. ஆனால்,இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளிகள் இடப்படுமா என்பதே இன்றைய எமது கேள்வியாகும்.

# கீரிமலை ஜனாதிபதி மாளிகை அளவீட்டுப்பணி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது!

— பு.கஜிந்தன்



யாழ்ப்பாணம் - கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் இன்றையதினம் அளவீடுகள் செய்வதற்கு நில அளவை திணைக்களம் வருகை தந்தது.

இந்நிலையில் குறித்த காணி அளவீட்டுக்கு அப்பகுதி மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன் காணியினை வழங்க முடியாது என கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கினர். இந்நிலையில் நில அளவை திணைக்களம் அங்கிருந்து திரும்பிச் சென்றது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே-226), காங்கேசன்துறை (ஜே-233) கிராம சேவகர் பிரிவுகளில் 12.0399 கெக்டேயர்( 29 ஏக்கர்) நிலம் அளவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான் மற்றும் புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளிலேயே இந்த நில அளவீடு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த அளவீட்டு பணிக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் நில அளவை திணைக்களம் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

**Basement for Rent**

Queen / James Potter
in Brampton

3 bedroom, 2 washrooms with seperate entrance

Available on January 1st 2024

**Call: 289-654-7141**

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**ROOM FOR RENT**

Scarborough Town Ctr அருகில் தனி அறை, 2 bedroom 2 bath condoல் வாடகைக்கு உள்ளது. Share with Tamil senior male. TTC at door step. Gym, Swim pools, Tennis, BBQ area, and more. Available January 1st. Prefer Tamil male.
Contact: 647 273 2053

**வீட்டில் உள்ள முதிய உறவுகளைப் பராமரிக்கும் சேவை (PSW SERVICE)**

உங்கள் வீட்டில் உள்ள முதியவர்களான உறவுகளைப் பராமரிக்கும் சேவையை (PSW Service) நாங்கள் செய்து வருகின்றோம்.

தொடர்புகளுக்கு- 647 701 9809 அல்லது 437 782 8776 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

**பெண் சமையல் உதவியாளர் தேவை**

ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு
பாலா மாஸ்டர்:- 416 418 8425

**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**

Cobourg நகரத்திலும் Downtown Toronto விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு Cook மற்றும் Kitchen Help ஆகியோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. Cobourg நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
416 294 7887

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எரிபொருள் விலை அதிகரிப்பினால் கடற்றொழிலாளர்களின் பாதிப்புக்கு மாற்று திட்டம் – அமைச்சர் டக்ளஸ்



எரிபொருள் விலையேற்றத்தினால் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள உற்பத்தி செலவு அதிகரிப்பை சமாளிப்பதற்கு மாற்று திட்டம் ஒன்றை விரைவில் அமுல்ப்படுத்தவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், எரிபொருள் விலையேற்றத்தை சமாளிக்கும் வகையில் கடற்றொழிலாளர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுவதை சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புக்களும், இலங்கை கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாடுகளும் விரும்பாத நிலை காணப்படுவதால் மாற்றுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சு தொடர்பான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது கடற்றொழிலாளர்களின் தேசிய உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வேறு வழிகளில் உதவுவது குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன்.

அந்த வகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் திட்டத்தின் கீழான நிதி உதவியில் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்துள்ளேன்.

அதேவேளை, எமது விவசாய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற சலுகைகளை கடற்றொழிலாளர்களுக்கும் வழங்க முடியும் என ஜனாதிபதி என்னிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், மாற்று மின்வலு - குறிப்பாக மின்கலம், காற்றாலை, பாய்மரம் மற்றும் சூரிய சக்தி கொண்ட மின் வலு கொண்டு கடற்றொழில் படகுகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பிலும் பரிசோதனைகளை மேற்கொண்டு, அது வெற்றியளித்துள்ளது. இதனை வெகு விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளேன்.

இதேவேளை அறுவடைக்குப் பின்னரான பாதிப்புகளைக் குறைக்கின்ற வகையில் நவீன குளிர்சாதன கருவிக் கட்டமைப்பினை பொருத்துவது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொணண்டு வருகின்றோம். அதனடிப்படையில் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன், கடற்றொழில் பலநாள் கலமொன்றில் இந்தக் கருவிக் கட்டமைப்பைப் பொருத்தி, அக்கலத்தினை ஒரு மாத காலம் கடற்றொழிலுக்கு அனுப்பி மேற்கொண்ட பரிசோதனையானது வெற்றியளித்திருக்கின்றது.

அந்த வகையில் தற்போது செயற்பாட்டில் இருக்கின்ற பலநாட் கலங்கள் அனைத்துக்கும் இக் கருவிக் கட்டமைப்பினைப் பொருத்தவுள்ளோம்.

அத்துடன், இனிமேல் புதிதாக கட்டப்படுகின்ற பலநாள் கலங்களுக்கு இக் கருவி பொருத்தப்படுவது கட்டாயமாக்கப்படும். இக் கருவிக் கட்டமைப்பு இல்லையேல் புதிய பலநாள் கலங்களுக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உரிய சட்ட நடவடிக்கைகு உட்படுத்தவும் – சமாச உப தலைவர் மகேசன் வேண்டுகோள்



பருத்தித்துறைக் கடலில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உரிய சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என வலி வடக்கு சமாசத்தின் உப தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட தொழிலாளர் கிராமிய சங்கத்தின் பொருளாளருமான செல்வராசா மகேசன் கோரிக்கை விடுத்தார்.

திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் சமாசத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களால் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் நீண்ட காலமாக பல பாதிப்புகளை அனுபவித்து வருகின்றனர்.

வடபகுதி கடலில் அத்துமீறி மீன்படியில் ஈடுபட்ட இந்தியா மீனவர்கள் 23 பேரை இலங்கை கடற்படை கைது செய்தார்கள்.

இலங்கை கடற்படை கைது செய்தமைக்கு அவர்களுக்கு நன்றியை தெரிவிப்பதோடு தொடர்ச்சியாக எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை தொடர்ந்தும் கைது செய்ய வேண்டும்.

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட பத்துக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களை கடற்படை கைது செய்த போதும் அவர்களுக்கு எதிராக இலங்கையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்படியில் ஈடுபட்ட நிலையில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட போதும் இந்தியாவில் இருந்து விடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் பருத்தித்துறை கடலில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கான அழுத்தங்களை வழங்கினாலும் உரிய தரப்பினர் அதற்கு இடம் கொடுக்காமல் உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றி அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

ஆகவே எமது மீனவர்களின் தொழில்களை அழிப்பதற்கும் வளங்களை சுரண்டுவதற்காக வருகை தரும் இந்திய மீனவர்களுக்கு எவ்வித பாரபட்சமும் காட்டக்கூடாது ஏனெனில் அவர்கள் எமது தொப்புள் கொடி உறவு என்றால் எம்மை அழிக்க முயற்சிக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் அன்ரன் ஜெபராசா, யாழ்ப்பாண மாவட்ட கிராமிய சம்மேளனங்களில் உப தலைவர் அந்தோணி பிள்ளை மரியதாஸ், வலி வடக்கு சமாசத்தின் தலைவர் பாக்கியநாதன் றேகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வட மாகாண ரீதியில் நெற் பயிரில் "வெண் முதுகு தாவரத்தத்தியின்" தாக்கம் அதிகரிப்பு – மன்னாரில் அவசர கலந்துரையாடல்

- மன்னார் நிருபர் (12-12-2023)

வட மாகாண ரீதியில் நெற் பயிரில் ஏற்படும் பாரிய நோய் தாக்கமான "வெண்முதுகு தாவரத்தத்தியின்" தாக்கம் தொடர்பாக செவ்வாய்க்கிழமை (12) மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவு படுத்தும் விசேட கலந்துரையாடல் மன்னார் உயிலங்குளத்தில் அமைந்துள்ள கட்டுக்கரை குள திட்ட முகாமைத்துவக் குழுவின் கேட்போர் கூடத்தில் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இக்கூட்டத்தில் வட மாகாணத்தில் தற்போது நெற் பயிர்களில் பாரிய அளவு சேதத்தை ஏற்படுத்தும் நோய் தாக்கம் தொடர்பாக விவசாய அமைப்பு பிரதிநிதிகளுக்கு பணிப்பாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நோய் தாக்கத்தின் பாதிப்புகள் தொடர்பாகவும் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் பாவிக்கப்பட வேண்டிய மருந்துகள் தொடர்பாகவும் பணிப்பாளரினால் விளக்கம் அளிக்கப்பட்டது

இதன் போது நெற்பயிர்ச்செய்கையில் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்கள் வெண் முதுகு தத்தியினால் பாரிய பிரச்சினைகளுக்கு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருவதாகவும் இவற்றில் 4 மாவட்டம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தெரிவித்தார்.




யாழ் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டெயர் நிலப்பர ப்பும், கிளிநொச்சி மாவட்டத்தில் 800 ஹெக்டெயர் நிலப்பரப்பும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 650 ஹெக்டெயர் நிலப்பரப்பும்,வவுனியா மாவட்டத்தில் 700 ஹெக்டெயர் நிலப் பரப்புமாக பெரும் பரப்பு வயல் நிலங்கள் பாதிப்படைந்துள்ளது. மன்னாரை பொறுத்தவரையில் மிக குறுகிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றை கட்டுப்படுத்த விவசாயிகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# வல்வெட்டித்துறையில் டெங்கு கட்டுப்பாடு நடவடிக்கை!



பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் இணைந்து 12-12-2023 அன்று கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் அகற்றியதுடன் டெங்கு பெருகக்கூடிய இடங்களும் இல்லாதொழிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு காலை 8:00 மணியிலிருந்து 11 மணிவரை முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக வல்வெட்டித்துறை கடற்கரையோர பிரதேசங்களில் காணப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள், ஏனைய பிளாஸ்டிக் கொள்கலன்கள் என்பன சிரமதானப் பணியின் மூலம் அகற்றப்பட்டதுடன் டெங்கு பெருகும் இடங்களும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

இதில் பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் தலைவர், செயலாளர், நிர்வாகிகள், தொண்டர்கள், பருத்தித்துறை பொது சுகாதார பரிசோதகர்கள், பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், ஊரிக்காடு இராணுவத்தினர், வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி, மற்றும் வல்வை சிவகுரு வித்தியாலய ஆசியர்கள், மாணவ மாணவிகள், ஊர் மக்கள் என பலரும் கலந்து கொண்டு குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளமை ஏன்?



இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களிடம், இலங்கை விமானப்படையின் படைத்தளபதி ஏயார் மார்சல் உதேனி ராஜபக்ஸ தெளிவுப்படுத்தினார். யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண கௌரவ ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில், இலங்கை விமானப்படையின் படைத்தளபதி உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள், கௌரவ ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இலங்கை விமானப்படையின் படைத்தளபதி ஏயார் மார்சல் உதேனி ராஜபக்ஸ, ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் நிரான் மல்லவராச்சி, வடக்கு மாகாண கல்விச் செயலாளர் பெற்றிக் நிரஞ்சன், தொல்பொருளியல் திணைக்களத்தின் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிராந்திய அலுவலகத்தின் அதிகாரிகள், இலங்கை விமானப்படையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாதுவதற்குரிய திட்டங்கள், அதற்கு தேவையான வளப்பகிர்வு, இலங்கை விமானப்படையினால் ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள், இசைநிகழ்ச்சி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அந்தவகையில், எதிர்வரும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்காக எரிவாயு விசையாழி விமான இயந்திரங்களை வழங்கவுள்ளதாகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான கற்றல் உதவிகளை பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் விமானப்படையின் படைத்தளபதி ஏயார் மார்சல் உதேனி ராஜபக்ஸ தெரிவித்தார். அத்துடன் யாழ் மாவட்டத்திலுள்ள 73 பாடசாலைகளை புனரமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மேலும், 73,000 தமிழ் மற்றும் ஆங்கில மொழி புத்தகங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக விமானப்படையின் படைத்தளபதி, கௌரவ ஆளுநரிடம் தெரிவித்தார்.

இதேவேளை, மருத்துவ முகாம், பற்சிகிச்சை முகாம், கண் சிகிச்சை முகாம், இலவச கண்ணாடிகளை வழங்குதல், இரத்ததான முகாம் நடத்துதல், 73 ஆயிரம் மரக்கன்றுகளை பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் விமானப்படையின் படைத்தளபதி ஏயார் மார்சல் உதேனி ராஜபக்ஸ கூறினார்.

அத்துடன், சைக்கிள் ஓட்டப்போட்டி, கல்விக் கண்காட்சி, மாலை நேர இசைநிகழ்ச்சி என்பவற்றை நடாத்தவும் எதிர்பார்ப்பதாக விமானப்படையின் படைத்தளபதி கௌரவ ஆளுநரிடம் தெரிவித்தார்.





விடயங்களை கேட்டறிந்த வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் அவர்கள், இன நல்லிணக்கத்திற்கும். ஒற்றுமைக்கும் இந்த செயற்பாடுகள் வழிவகுக்கும் என கூறினார். பாடசாலைகளின் புனரமைப்பின் போது கழிவறை மற்றும் குடிநீர் வசதி தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழிற்துறைசார் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கௌரவ ஆளுநர் குறிப்பிட்டார். அத்துடன் முப்படைகளின் செயற்பாடுகள், படைத்தளங்கள் குறித்து கல்வி சுற்றுலாக்கள் ஊடாக மாணவர்களை தெளிவுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் உயிரிழப்பு – யாழ்ப்பாணத்தில் துயரம்!

மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் ஒருவர் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வதிரி, கரவெட்டி - நெல்லியடி பகுதியைச் சேர்ந்த நேசராசா அன்ரன் (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 9ஆம் திகதி குறித்த நபரின் குடும்பத்தவர்கள் கோண்டாவில் உள்ள உறவினர்களின் வீட்டிற்கு கொண்டாட்டம் ஒன்றிற்கு சென்றிருந்த நிலையில் அவர் தனியாக வீட்டில் இருந்துள்ளார்.

இதன்போது மதுபோதையில் வந்த உயிரிழந்து நபரின் அக்காவின் மகன் (மருமகன்) கொட்டனால் அவரை தாக்கியுள்ளார். இந்த விடயம் அறிந்த அயலவர்கள் அவரை மீட்டு மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். மேலதிக சிகிச்சைக்காக அவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்றையதினமே மாற்றப்பட்டார்.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தாக்குதலை மேற்கொண்டவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மந்திகை பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கடல் வழியாக இலங்கைக்கு கடத்த முயன்ற ஒரு லட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் பறிமுதல்: சந்தேக நபர்கள் தப்பியோட்டம். இந்திய கடலோர காவல் படை நடவடிக்கை



- மன்னார் நிருபர் (13-12-2023)

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் இலங்கைக்கு செவ்வாய்க்கிழமை (12) கடத்த முயன்ற சுமார் ஒரு





லட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் இந்திய கடலோர காவல் படையினரால் நடுக் கடலில் சுற்றிவளைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

இந்திய கடலோர காவல் படை வீரர்களை கண்டதும் படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து தப்பித் ததால் படகுடன் வலி நிவாரணி மாத்திரை களை பறிமுதல் செய்து இந்திய காவல் படை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகள் போதை மாத்திரைகளாக இலங்கையில் பயன்படுத்தப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்டதாகவும் இதன் மொத்த இந்திய மதிப்பு சுமார் ரூ.8 லட்சம் இருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மட்டக்களப்பில் கைது செய்யப்படும் சிறு குற்றவாளிகளை சீர்திருத்தி அவர்களின் தொழில் வாய்ப்புக்காக நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையம்



(கனகராசா சரவணன்)



சமுதாயத்தில் சிறு குற்வாளிகளை சீர்திருத்தி அவர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கத்தின் கீழ் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த காரியாலயம், மட்டு மாநகரசபையின் அனுசரனையுடன் நீதிமன்றத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையத்தை நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் புதன்கிழமை (13) சம்பிராய பூர்வமாக திறந்துவைத்தார்.

மட்டக்கப்பு பிராந்திய சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் முகமட் ஸப்றீன்; தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் மற்றும் சமுதாய சீர்திருத்த வேலைப்பரிசோதகர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மாநகர ஆணையாளர் நீதவான் நீதிமன்ற பதிவாளர் மட்டக்களப்பு சிறுவர் நன்நடத்தை நிலையப்பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் நீதிமன்றத்துக்கு அருகாமையில் வீதி ஓரத்தில் நிர்மானிக்கப்பட்ட கட்டிடத்தை நீதவான் பீற்றர் போல் நாடாவெட்டி திறந்துவைத்ததையடுத்து அங்கு விற்பனை நடவடிக்கைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சமுதாயத்தில் சிறு குற்வாளிகளை சீர்திருத்தி அவர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கத்தின் கீழ் திறந்து வைக்கப்பட்ட இந்த விற்பனை நிலையத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் குற்றச்செயல்களில் இருந்து விடுபட்ட சிறந்த சமூகமொன்று உருவாகும் என்பதாகும் என்பதுடன் குற்றவாளிகளை சீர்திருத்தும் பல்வேறுவகையான நடவடிக்கைகளை சமுதாய சீர்திருத்த காரியாலயம் மட்டு பிராந்தியத்தில் முன்னெடுப்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு வவுணதீவில் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்ட த.தே.ம. முன்னணி அமைப்பாளர் அவரது மகன் உட்பட்ட இருவருக்கும் 27 வரை விளக்க மறியல்



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் உட்பட்ட இருவரையும் எதிர்வரும் 27ம் திகதி-வரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் இன்று புதன்கிழமை (13) உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் 27ம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியினர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தினை அலங்கரிக்க மட்டக்களப்பு நகரில் இருந்து பட்டா ரக வாகனத்தில் சிவப்பு மஞ்சல் கொடிகள் மற்றும் கம்பிகள் உட்பட்ட பொருட்களை எடுத்துச் சென்ற நிலையில் வாகனத்தை மறித்து சாரதியை கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட சாரதியை பார்பதற்காக பொலிஸ் நிலையம் சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) அவரது மகன் ஆகியேர் அங்கு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வீதியில் மாவீரர்களுக்கா விளக்கேற்றி நினைவேந்தலில் ஈடுபட்டதையடுத்து அவர்கள் இருவரையும் கைது செய்ததுடன் 3 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை 13ம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதில் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த சாரதியை பிணையில் விடுவிப்பதற்காக கடந்தவாரம் முன்நகர்வு விண்ணப்பபத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நிலையில் அவர் பிணையில் வெளிவந்ததுடன் ஏனைய இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணைக்காக இருவரையும் மட்டு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் பீற்றர்போல் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 27 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தவிட்டார்.

# கொழும்பு இந்துக் கல்லூரி இளம் கிரிக்கெட் வீரர் ரிஷியுதனுக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவு

கொழும்பு இந்துக் கல்லூரியின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரரான 10 வயது ரிஷியுதனின் குறிப்பிடத்தக்க திறமைக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் (CTC) தமது ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது. சமீபத்தில் நடந்த பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டியில், ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டம் கூட விட்டுக்கொடுக்காமல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார்.

இந்த சாதனையை பாராட்டுவதற்காக, கனடிய தமிழ் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராஜ் தவரட்ணசிங்கம் டிசம்பர் 12 ஆம் திகதி ரிஷியுதனின் இல்லத்திற்குச் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், கிரிக்கெட் மீதான அவரது ஆர்வத்திற்கு கனடிய தமிழ் காங்கிரஸ் உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது ரிஷியுதனின் குடும்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கனடிய தமிழ் காங்கிரஸ், குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான முச்சக்கர வண்டியின் குத்தகையை முழுமையாக செலுத்தியது, இது அவர்களின் நிதிச் சுமைகளைத் குறைப்பதுடன், ரிஷியுதனின் கிரிக்கெட் கனவுகளை அடைவதற்கு ஆதரவான சூழலை ஏற்படுத்தும்.

19வது வயதில் இலங்கை தேசிய அணிக்காக விளையாடும் ரிஷியுதனின் கனவிற்கு கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என ராஜ் தவரட்ணசிங்கம் ரிஷியுதனின் பெற்றோரிடம் உறுதியளித்தார்.



கனேடிய தமிழ் காங்கிரஸ், தமிழ் சமூகத்தில் உள்ள திறமைகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது மற்றும் கலாச்சார பெருமை மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் விளையாட்டுகளின் முக்கிய பங்கை ஒப்புக்கொள்கிறது. ரிஷியுதன் போன்ற இளம் திறமையாளர்களின் கனவுகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவிற்காக எமது அமைப்பு நன்றி தெரிவிக்கிறது.

# துவிச்சக்கர வண்டியில் இருந்து மயங்கி விழுந்த யாழ்ப்பாணம் – அல்வாய் வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் மரணம்!

துவிச்சக்கர வண்டியில் இருந்து மயங்கி விழுந்த ஒருவர் வியாழக்கிழமை (14) உயிரிழந்துள்ளார். இதன்போது யாழ்ப்பாணம் - அல்வாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த வல்லி சின்னத்தம்பி (வயது 67) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கடந்த 11ஆம் திகதி, துவிச்சக்கர வண்டியில் வீட்டில் இருந்து கடைக்கு செல்லும்போது மதியம் 12.00 மணியளவில் மயங்கி வீதியில் விழுந்துள்ளார். இதன்போது அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு 12.30 மணியளவில் மந்திகை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக அன்றையதினம் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டா இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கனடிய செய்திகள் Canadian News

# வாகனத் திருட்டுக்களை தடுக்க துரிதமான நபவடிக்கைகளை எடுக்க ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் மேலதிக நிதி ஒதுக்கியுள்ளது



யோர்க் பிராந்தியத்தில் வாகனத் திருட்டை எதிர்த்துப் போராட $900,000 முதலீடு செய்கிறது.

காவல்துறைக்கு உதவும் வகையில், ஒன்றாறியோ அரசாங்கம், யோர்க் பிராந்தியத்தில் வாகன திருட்டை எதிர்த்துப் போராடுவதற்கு 900,000 டாலர்களை முதலீடு செய்துள்ளது.

இதற்கான அவசியம் என்ன என்பதை விளக்கி மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் செய்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- யோர்க் பிராந்தியத்தில்,
    - 2019 ஆம் ஆண்டிலிருந்து வாகனத் திருட்டு 200மூ அதிகரித்துள்ளது.
    - 2023 இல் 3,300 க்கும் மேற்பட்ட வாகனங்கள் திருடப்பட்டுள்ளதாக காவல்துறை பதிவு செய்துள்ளது.
    - சுமார் 90% திருட்டுகள், பிராந்தியத்தின் தெற்குப் பகுதியில் நடந்துள்ளன.

- ஒன்றாறியோ மாகாணம்
    - 2014 முதல் 2021 வரை, மாகாணம் முழுவதும் வாகனத் திருட்டு 72% அதிகரித்துள்ளது.
    - கடந்த ஆண்டில் மட்டும் 14மூ அதிகரித்துள்ளது.

“Markham-Thornhill ஐப் பாதுகாக்கும் முயற்சியில், கார் திருட்டை எதிர்த்து ஒன்ராறியோவின் $18 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் ஒரு பகுதியாக யோர்க் பிராந்திய காவல்துறைக்கான சமீபத்திய நிதியுதவி வழங்குகிறது. இந்த வலுவான முன்முயற்சி, சிறப்பு குழுக்கள் மற்றும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலையமைப்புகளை அகற்றுவதற்கும் சமூக பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் மன அமைதியை வழங்குவதற்கும் எங்கள் வலுவான உறுதிப்பாட்டை வழங்குகின்றது.” என்று மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திரு லோகன் கணபதி கூறினார்.

உங்கள் பாதுகாப்பு எமது ஒன்றாரியோ அரசாங்கத்தின் முக்கிய நோக்கம், மேலும் எங்கள் சமூகத்தில் வாகனத் திருட்டை எதிர்த்து நடவடிக்கை எடுப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இந்த முயற்சியின் முதலீடு மார்க்கம்-தோர்ன்ஹில் குடியிருப்பாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பின் ஒரு முயற்சி. என்றும் நான் அறியத்தருகின்றேன்.

இவ்வாறு மாகாண பாராளுமன்றத்தின் மார்க்கம் தோர்ன்ஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## Sri Lankan Accountants Association of Canada had its 21st Annual Gala

# கனடா இலங்கை கணக்காளர்கள் சங்கம் நடத்திய 21வது ஆண்டு விழா



கனடாவில் சிறப்பாக இயங்கிவரும் நிபுணத்துவம் பெற்ற இலங்கை கணக்காளர்கள் சங்கம் அதன் 21வது ஆண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது.

டிசம்பர் 02 ஆம் தேதி ஸ்கார்பரோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் இடம் பெற்ற உரைகள். நடனங்கள். இசை நிகழ்ச்சிகள் மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வு ஆகியன சிறப்பாக இருந்தன. கணக்காளர்களின் சாதனைகள், மற்றும் சிறந்த அங்கத்தவர்களை கௌரவித்தல் மற்றும் பிணைப்புகளை வலுப்படுத்துதல் போன்றவற்றிலும் விழா ஏற்பாட்டாளர்கள் முக்கிய கவனம் எடுத்திருந்தனர்.

மேற்படி 21வது ஆண்டு விழாவில் 400க்கும் மேற்பட்ட அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

நடனம், இசை மற்றும் பல்வேறு வகையான பொழுதுபோக்குகளுடன் கூடிய நிகழ்வு. அனைவரும் சேர்ந்து அற்புதமான மாலை நேரத்தை இனிமையாக கழித்து அனுபவிக்க இந்த நிகழ்வு உதவியது என்றால் அது மிகையாகாது.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.










THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

கனடிய செய்திகள் Canadian News

# ஸ்காபுறோவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பெற்ற Senthil Financial Services வரி மற்றும் நிதி ஆலோசனை வழங்கும் நிறுவனம்

சனிக்கிழமை 9ம் திகதி ஸ்காபுறோவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பெற்ற Senthil Financial Services வரி மற்றும் நிதி ஆலோசனை வழங்கும் நிறுவனத்தின் ஆரம்ப விழாவில் அழைக்கப்பெற்ற பல முக்கிய பிரமுகர்கள். வர்த்தகப் பிரமுகர்கள். வாடிக்கையாளர்கள் மற்றும் ஊடக



நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்து நிறுவனத்தின் ஸ்தாபகரும் பல துறை விற்பன்னருமான திரு. ஆறுமுகம் செந்தில்வடிவேல் அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் வாழ்த்திச் சென்றனர்.

அங்கு அழைக்கப்பெற்ற நண்பர்கள் மற்றும் ஊடகத்துறை பிரமுகர்கள் என சிலர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள். அங்கு அழைக்கப்பெற்றிருந்த ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் நாடாவை வெட்டி நிறுவனத்தை திறந்து வைத்த பின்னர் நிறுவனத்தின் தலைவர் கனடாவின் மத்திய மற்றும் மாகாண நிதி அமைச்சுகளில் பணியாற்றி பலரின் நன்மதிப்பையும் பாராட்டுக்களைப் பெற்ற திரு. ஆறுமுகம் செந்தில்வடிவேல் அவர்களுக்கு ஒன்றாரியோ மாகாண அரசின் சார்பிலான பாராட்டுப் பத்திரத்தை வழங்கினார். இங்கு காணப்படும் படங்கள் காட்சிப்படுத்துகின்றன.

(திரு. செந்தில்வடிவேல் அவர்களை வாழ்த்த விரும்புவோர் (416) 616-6031 என்னும் இலக்கத்தை அழைக்கவும்)




**- சத்தியன் (கனடா உதயன் செய்திப் பிரிவு)**









# சனிக்கிழமை 9ம் திகதி பிரம்ரன் மாநகரில் நடைபெற்ற கனடா வாழ் கவிஞர் சந்திரமோகன நந்தவனம் ஒலி ஒளி கவிதைப் பேழை வெளியீட்டு விழா









கனடா வாழ் கவிஞர் சந்திரமோகன் அவர்களின் நந்தவனம் ஒலி ஒளி கவிதைப் பேழை வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை 9ம் திகதி பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலய கலாச்சார மண்டபத்தில் "மயிலைக்கவி" கஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் குவிந்திருந்த இந்த கவிதைப் பெருவிழாவில் சபையோர் கூடியிருந்து விழா ஏற்பாட்டாளர்களையும் பேச்சாளர்களையும் உற்சாகப்படுத்தினர்.

"யுகம்" வானொலி நிலைய அதிபர் கணபதி ரவீந்திரன் மற்றும் கவிஞர் சிவா சின்னத்தம்பி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். விழாத் தலைவர் "மயிலைக்கவி" கஜன் தனது தலைமையுரையில் கவிஞர் சந்திரமோகன் அவர்களின் "நந்தவனம்" ஒலி ஒளி சேர்க்கையில் வெளியிடப்பெற்ற கவிதைப் பேழையை உருவாக்குவதற்கு தானும் கவிஞரும் உழைத்த வரலாறு மற்றும் தாயகத்தில் உள்ள கலைஞர்களை பயன்படுத்திய முறைகள் போன்றவற்றை விபரித்து கவிஞரின் ஆற்றலையும் இயல்பானதும்அடக்கமான துமானபண்மையும் பற்றி உயர்வாக எடுத்துரைத்தார்.

அடுத்து உரையாற்றி கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர்







லோகேந்திரலிங்கம் அவர்கள் "நந்தவனம்" கவிதைப் பேழையின் சிறப்புக்களையும் கவிஞரின் சமூகப் பார்வை மற்றும் வாழ்க்கை மீதான நேசிப்பு பற்றி எடுத்துரைத்து பின்னர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து அவரோடு அன்றைய கவிதைப் பேழையையும் ஒப்பிட்டு உரையாற்றி கவிஞர் சந்திரமோகனைப் பாராட்டி தனது உரையை நிறைவு செய்தார்.

அடுத்து கவிஞரும் வானொலிக் கலைஞருமான திருமதி. ஜோதி ஜெயக்குமார் "நந்தவனம்" கவிதைப் பேழை பற்றிய ஆய்வுரையை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் கவிஞர் சந்திரமோகன் அவர்களின் கவிதைச் சிறப்புக்களை எடுத்துக் கூறி தொடர்ந்து அவற்றை சங்க கால கவிதைகள் மற்றும் திருக்குறள் போன்ற இலக்கியப் படைப்புக்களோடு ஒப்பிட்டு கவிஞரின் உயர்ந்த சிந்தனைத் திறனை வியந்து பாராட்டினார்.

நூல் வெளியீடு ஆரம்பமானபோது சிறப்புப் பிரதியை கவிஞரின் சகோதரர் பாபநாதசிவம் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து சபையோர் அனைவரும் பிரதிகளை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர். இறுதியின் கவிஞர் சந்திரமோகன் தனது நன்றியுரை கவிதை மூலம் சமரப்பித்து தனது உணர்வுகளையும் நன்றியையும் பகிர்ந்து கொண்டார்.தொடர்ந்து இனிய பாடல்களை பாடக பாடகிகள் வழங்க சபையோர் அவற்றை இரசித்துச் சென்றனர்.

**- சத்தியன் (கனடா உதயன் செய்திப் பிரிவு)**

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தேயிலை கொழுந்து கொய்யும் மலையக நடனத்தில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு!



தேசிய ரீதியில் நடைபெற்ற தேயிலை கொழுந்து கொய்யும் மலையக நடனத்தில் முதலிடம் பெற்ற வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் மாணவர்களுக்கு மாபெரும் கௌரவிப்பு இன்றையதினம் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டு, தேவாரம் இசைக்கப்பட்டு வரவேற்புரையுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள், தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற நடனம் என்பன இடம்பெற்றன.





அதனைத் தொடர்ந்து குறித்த நடனத்தினை பயிற்றுவித்த நடன ஆசிரியர் திருமதி. சகிலா சுதாகரன், சங்கீத ஆசிரியர் திருமதி. நித்தியா தவக்குமார் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், பங்குபற்றிய மாணவர்களுக்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினாலும் நடன ஆசிரியராலும் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்லூரியின் முதல்வர் திரு. லங்கா பிரதீபனது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி. சுபத்திரா கந்தகுமார் அவர்களும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் திரு. அ. சிவானந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன், இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கு – கிழக்கைப் பிரித்தமைக்காகத் ஜே.வி.பி தமிழ் மக்களிடம் மன்னிப்பைக் கோருமா? – பொ. ஐங்கரநேசன் கேள்வி



ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் ஊடாகத் தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

தங்கள் மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு - கிழக்கை நீதிமன்றப் படியேறிச் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜே.வி.பி என்பதைத் தமிழினம் ஒருபோதும் மறவாது. இந்நிலையில், தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோருகின்ற ஜே.வி.பி வடக்கு-கிழக்கைப் பிரித்தமைக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்பையுமல்லவா கோரவேண்டும். அவ்வாறு கோருமா? என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு ஜே.வி.பியின் தலைவர் கோரிக்கை விடுத்திருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944ஆம் ஆண்டில் கூட்டிய கொழும்புப் பிரஜைகளின் பொதுக்கூட்டத்தில் சுதந்திர இலங்கையின் அரசியல் அமைப்புக் கொண்டிருக்கவேண்டிய கோட்பாடுகள் குறித்து வலியுறுத்தியிருந்தது.

அவற்றில், இனங்களுக்குச் சுயநிர்ணயம் தொடர்பாக பாரதீனப்படுத்த முடியாத உரிமை இருந்து வருகிறது என்பதை அங்கீகரிப்பதும், அவர்கள் விரும்பினால் அவர்களுக்கே உரித்தான சுயாதீன அரசுகளை உருவாக்கிக்கொள்ள முடியுமென்பதை அங்கீகரிப்பதும் ஒரு கோட்பாடாகும்.

ஆனால், கம்யூனிச சித்தாந்தத்தின் அடியொற்றிகளாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றி இதுவரையில் தெரிவித்ததில்லை.

தமிழ் மக்களைத் தங்களுடன் இணையக் கோருகின்ற ஜே.வி.பி அவர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகவுமல்லவா தெரிவிக்கவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமா?

தமிழ் மக்கள் தங்களுடன் இணைந்தால் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் ஜே.வி.பியின் தலைவர் கூறிவருகிறார்.

முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்காகக் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் என்ன தேவைகளின் பொருட்டு நீண்டநெடிய தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள் என்பது அவர் அறியாததல்ல.

தேவைகளை நிறைவேற்றுவோம் என்று கூறும் ஜே.வி.பி தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தன்வசம் உள்ள தீர்வையுமல்லவா வெளிப்படுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு வெளிப்படுத்துமா? தமிழ் மக்களின் இந்தக் கேள்விகளுக்கான தெளிவான பதில்களை ஜே.வி.பி வழங்காதவரை தமிழ்மக்களின் மனங்களை அதனால் ஒருபோதும் வெல்ல முடியாது.

அதுவரை ஜே.வி.பியின் இந்த அழைப்புகள், அறிவுப்புகள் எல்லாம் ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவை வெல்ல வைப்பதற்காகத் தமிழ் வாக்குகளை நோக்கி வீசப்படும் தூண்டில்களாக மட்டுமே உணரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# மார்க்கம் Greensbrough Seniors Wellness Club தமிழ் பேசும் மூத்தோர் அமைப்பு நடத்திய நத்தார் தினக் கொண்டாட்டம்





இன்று வியாழக்கிழமை 14ம் திகதி மாலை கனடாவில் மார்க்கம் நகரில் இயங்கிவரும் **Greensbrough Seniors Wellness Club** தமிழ் பேசும் மூத்தோர் அமைப்பு நடத்திய நத்தார் தினக் கொண்டாட்டம். சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைப்பின் தலைவர் திருமதி செல்வா அருள்ரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த கொண்டாட்டத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

மேற்படி அமைப்பு கடந்த 03-12-2023 அன்று நடத்திய வருடாந்த இராப்போசன விருந்தும் சந்திப்பு நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தவர்கள் மற்றும் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்கள் ஆகியோருக்கு இன்று

சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. அவற்றை தலைவி செல்வா அருள் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் உட்பட சிலர் வழங்கினார்கள். டாக்டர் போல் ஜோசப் ம ற்றும் திருமதி இந்திராணி நாகேந்திரம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம். "உதயன்" லோகேந்திரலிங்கம் ஆகியோருக்கு அவர்கள் ஆற்றிவரும் ஊடகச் சேவைகள் தொடர்பான பாராட்டுக் கேடயங்கள் வழங்கப்பெற்றன.

அங்கத்தவர்கள் அனைவருக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பெற்றன. அத்துடன் நத்தார் கீதமும் இசைக்கப்பெற்றது.

# வடக்கில் ஏற்படவுள்ள காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் – பு.கஜிந்தன்

வட மாகாணத்தில் எதிர்வரும் நாட்களில் காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகள், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் இணையவழி உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று (14.12.2023) மாலை நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநரும், வடமாகாண மாவட்டங்களின் இணைத் தலைவருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,
கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மன்னார்-முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் குலசிங்கம் திலீபன் பா.உ, ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர்கள், ஜனாதிபதி அவர்களின் மேலதிக செயலாளர் இளங்கோவன், யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜா, வட மாகாணத்திற்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர், வட மாகாணத்தின் 5 மாவட்டங்களின் அனர்த்த நிவாரண முகாமைத்துவ பணிப்பாளர்கள், உட்பட துறைசார்ந்த அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.






சுவாமியே சரணம் ஐயப்பா

# விஷ்ணு மந்திரில் நெய் நிரப்பு விழா

## VISHNU MADIR

8640 Yonge St., Richmond Hill, Ontario
(YONGE ST. AT HWY.7)




சரணம் ஐயப்பா

சகல மக்களையும் காத்தருளும் கலியுகவரதன் சுவாமி ஐயப்பனுக்கு நெய் நிரப்பும் விழா வரும் DECEMBER 25ம் திகதி காலை 9.30 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. அத்தருணம் விரதம் இருக்கும் பக்தர்களுடன் ஐயப்ப அருள் வேண்டும் பக்தர்கள் அனைவரையும் வந்து தங்கள் கையால் நெய் நிரப்பு அருள் பெற அழைக்கின்றோம். பக்தர்கள் இடும் காணிக்கை சபரிமலைக்கு நிச்சயம் சென்றடையும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.

**நெய் நிரப்பும் சாமிமாரிடம் எவ்வித கட்டணமும் அறிவிடப்படமாட்டாது.**

பூஜை முடிந்தவுடன் அன்னதானம் வழங்கப்படும்

உபயம் செய்ய விரும்பும் பக்தர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**The Nilagiris Inc:**
416- 412- 0024, 905-794-7444.

**Anjappar chettinad Restaurant :**

**Sponsors:**
**The Nilgiris Inc**
**Anjappar Chettinad Restaurant**
**EZHILMARAN-GEETHA FAMILY**

For more information please contact:
மேலதிக விபரங்களுக்கு:
**Vishnu Mandir at 905.886.1724 or Venkatadri or Saraswathy Seshadri at 905.943.9323**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர் தாயகம் இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் போது உலகத் தமிழர் பேரவை பிடில் வாசிக்கின்றதா?

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கமாகக் கொண்டு செயற்படும் பல அமைப்புகள் மத்தியில், குளோபல் தமிழ் ∴போரம் (GTF) எனப்படும் உலகத் தமிழர் பேரவை (உ.த.பே) வெவ்வேறு புத்த அமைப்புக்களைச் சேர்ந்த மூத்த புத்த பிக்குகள் கொண்ட இலங்கைக்கான "சிறந்த இலங்கை சங்க மன்றத்தை" சந்தித்ததானது, பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் படிப்படியாக தங்களுக்கு உரித்தான அனைத்தையும் இழந்து வருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் வரலாற்றில் பௌத்த மதகுருமார்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இதன் காரணமாகவே, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் பொருட்டு தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தாமல் இரத்து செய்யப்பட்டன.

இலங்கைத் தீவில் வரலாற்று ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சுழற்சி மற்றும் இனப்படுகொலைக்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறிலங்கா அரசானது, நாட்டை ஒற்றை இன, ஒரு மொழி, மற்றும் ஒற்றை மத (mono ethnic, mono lingual, mono religious) சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதே ஆட்சியாளர்கள் கொள்கையாக கொண்டுள்ளார்கள். இந்த நிலையில் உ.த.பே உடனான சந்திப்பின் பின்னர் பௌத்த மதகுருமார்கள் வெளியிட்ட பிரகடனத்தில் இலங்கையின் பன்முகத்தன்மையை ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளதானது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் திகைப்பையும் உருவாக்கியுள்ளது. இந்தச் சந்திப்பு தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் அரசியல் யுக்தி கொண்டதா என தமிழ் சமூகம் சந்தேகம் கொள்கின்றது.

எந்தவித கலந்தாலோசனையும் இல்லாமல் ரகசியமாக வைக்கப்பட்ட "இமயமலைப் பிரகடனம்" தமிழ் மக்களது எரியும் பிரச்சினைக்கு எண்ணை ஊற்றுவதாக உள்ளது. "இமயமலைப் பிரகடனம்" பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து பொதுவெளிக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்கு முன்னர் இந்த விடயம் தமிழர் தரப்பில் எவருடனும் ஆலோசிக்கப்படாமல் திரைமறைவில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

மறுபுறம் புவுகு இதே போன்ற செயற்பாட்டை 2015 இல் ரணில் விக்ரமசிங்கா பிரதமராக இருந்தபோது அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் ஆரம்பித்து, அது ஒட்டுமொத்த தோல்வியில் முடிந்தது. அதன் முழுமையான செயல்முறையும் இலங்கை அரசால் வசதியாக வடிவமைக்கப்பட்ட ஒரு மாயை என்பதை உணர்ந்து கொள்ள உலகத் தமிழர் பேரவைக்கு (GTF) 5 ஆண்டுகள் பிடித்தது. UNHRC செயல்முறையை இழுத்தடித்து நீர்த்துப் போகச் செய்யவும், கடந்த கால வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக சிறிலங்காவினை மறுகட்டமைக்க வேண்டும் என அதிகரித்து வரும் அழுத்தங்களை தந்திரமாக கையாளவும் மைத்திரிபால மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கு உலகத் தமிழர் பேரவையின் (GTF) உதவி தேவைப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தொடர்ச்சியாக பதவியிலிருந்த இலங்கை அரசாங்கங்களின் தோல்வியுற்ற கொள்கைகளால் மீண்டும் மீண்டும் வன்முறை தாக்குதல்கள், கொலை, கொள்ளைகள் மற்றும் சொத்துக்கள் அழித்தல், உயர் மட்ட ஊழல், துஷ்பிரயோகம், குற்றத்திற்கான தண்டனையிலிருந்து விலக்களித்தல், பொருளாதார பின்னடைவு, இராணுவமயமாக்கலுக்கான நிதி விரயம், கடன் பொறி, அதீத அதிகார மையமயமாக்கல், சர்வதேச தனிமைப்படுத்தல் மற்றும் பொருளாதார வங்குரோத்து ஆகியவற்றிற்கான மூல காரணங்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்யாமல் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆழமாக நோக்காமல் மேலோட்டமாக ஒரு அற்பமான விடயமாக கருதினால் அதற்கான நிலைத்து நிற்க்க கூடிய தீர்வு கிட்டப் போவதில்லை. அரசியலமைப்பு ரீதியாக தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளுக்கு தீர்வு காணாமல், அர்த்தமுள்ள எந்த மாற்றங்களும் அங்கு ஏற்படப் போவதில்லை. பௌத்த சிங்கள பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறாமல், மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சி சிங்கள-பௌத்த மேலாதிக்கம் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் "கல்லிலிருந்து இரத்தம் எடுப்பது" போன்றதாகும். இவர்கள் இனவாதத்தை சிங்கள மக்கள் மீது தூவுவதன் மூலம் நாடாளுமன்றத்திற்குச் செல்வதை உயிர் மூச்சாகக் கொண்டுளனர்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தை ஆராய்ந்து நிகழ் காலத்தை தனக்குச் சாதகமாகக் கையாளுபவர். தமிழர்களின் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யவும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் புவுகு இன் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளிக்கும்.

கடந்த காலத்தை தனக்கு சாதகமாக கையாளும் ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்பு, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுடன் பேசுவதில் வெற்றி என்ற போர்வையில் தமிழர்களின் குரல்களை மூடி மறைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு புவுகு இன் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளித்துள்ளது.

சர்வதேச தலையீட்டை அகற்றி உள்நாட்டின் பொறிமுறைக்குள் முடக்கி விடும் நோக்கோடு உருவாக்கப்பட்ட உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவிற்கான (TRC) சர்வதேச மட்டத்திலான ஆதரவை திரட்டவும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் ரணிலுக்கு இது வாய்ப்பளித்துள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பலவும் நிரந்தர அரசியல் தீர்வுக்காக தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் சமாதானத்துடனும், சமத்துவத்துடனும் வாழ்வதற்கான தீர்வினை அடைவதற்காக இந்த அமைப்புக்கள் தங்கள் நேரத்தையும், பணத்தையும், உழைப்பையும் கடுமையாகச் செலவிடுகின்றன. இந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்புக்கூறலை வலியுறுத்துகின்றன.

UNHRC இன் கடுமையான தீர்மானங்கள் 46/1 மற்றும் 51/1 இற்கு அமைய இலங்கையை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதுடன் (Sri Lanka Accountability Project - SLAP), "மேக்னிட்ஸ்கி" (Magnitsky) சட்டம் மற்றும் உலகளாவிய மனித உரிமைகள் தடைச் சட்டம் (Global Human Rights Sanctions Act) போன்றன மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ந்து வற்புறுத்துதல், உறுப்பு நாடுகளால் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டங்களை பயன்படுத்தப்பட வேண்டும் என்று பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 75 வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவல நிலை பற்றிய சர்வதேச சமூகத்தின் பார்வையில் ஏற்படுத்தப்பட்டு வரும் புரிதலினை புவுகு இன் நடவடிக்கையின் விளைவுகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன.

- OHCHR ஆல் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கை மீதான பொறுப்புக்கூறல் திட்டத்தை (SLAP) பாதிப்படையச் செய்கிறார்கள்.

- சர்வதேச குற்றவியல் விசாரணை பொறிமுறைக்கு வழிவகுக்கும் அனைத்து முன்னெடுப்புக்களுக்கும் மாற்றாக உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை (TRC) போன்ற ஒரு உள்ளக செயல்முறைக்குள் அடக்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியாகும்.

- இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா போன்ற உலகத் தலைவர்களை நேரடியாகத் தலையிடச் செய்யும் முயற்சிகள் ஊடாக சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதற்கு தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும், அத்தகைய தீர்வில் அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் உருவான பல ஒப்பந்தங்களை சிங்கள தரப்புகள் ரத்து செய்ததன் அடிப்படையில், அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கான எந்தவொரு உள்ளக செயல்முறையிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

- இதன் விளைவாக, புவுகு இன் முயற்சி பாதிப்பைக் கொடுக்கும் என்பதோடல்லாமல் தமிழ் அமைப்புகள் கடந்த 15 ஆண்டுகளாக சிரத்தையுடன் உருவாக்கிய தீர்வுக்கான உத்திகளையும் முயற்சிகளையும் நாசமாக்கிவிடும்.

- இலங்கை அரசாங்கமும் ஊடகங்களும் GTF இன் பௌத்த மதகுருமார்களுடனான சந்திப்புக்கள் குறித்து செய்துவரும் விளம்பரங்கள் சர்வதேச சமூகத்திற்கு தவறான செய்தியை பரப்பியுள்ளன. தமிழ் மக்கள் தங்களின் நீண்டகால இன்னல்களுக்கு விடிவு காணப் போராடுகிறார்கள். அதற்கு எதிரானதொரு கருவியாகவே இது பயன்படும். சிங்கள பௌத்தர்களின் தயவில் தமிழர்களை கை விட்டுவிட்டு, இலங்கையில் சர்வதேச சமூகத்தின் தலையீடு இல்லாத கொள்கையை முன்னெடுக்க ரணில் விக்ரமசிங்கே அரசுக்கு வாய்ப்பாகி விடும்.

இந்த வேளை, GTF எந்த விதத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை கேள்விக்குள்ளாக்குவது பொருத்தமானது. புலம்பெயர் தமிழ் 14 அமைப்புக்களின் கூட்டு அமைப்பாக பிரான்சில் GTF 2009 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதிலிருந்து, அவற்றில் 13 தமிழ் அமைப்புகள் நாளடைவில் தங்கள் அங்கத்துவத்தை மீளப் பெற்று விட்டன.

எனவே, GTF பெரும்பான்மையான புலம்பெயர் அமைப்புகளின் கூட்டு முடிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதே தவறானதாகும். பலத்துடன் செயற்படும் வெவ்வேறு தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் நீதியுடன் கூடிய சமாதானத்துடன் வாழ்வதற்கு உலக நாடுகளின் தலையீட்டைக் கோருகிறார்கள். GTF இன் இந்த நடவடிக்கை அந்த ஒற்றுமையை பலவீனப்படுத்தி புலம்பெயர் தமிழர்களை பிளவுபடுத்தி சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் இலங்கை அரசின் திட்டத்திற்கு வகை செய்கிறது.

நாம் யதார்த்தமான வகையில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சமாதான சகவாழ்வு மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான காலவரையறையுடன் கூடிய உறுதியான நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டியதுதான் தகுந்த வழியாகும்.

பின்வரும் தமிழர் அமைப்புக்கள் சார்பாக இந்த அறிக்கை தயாரிக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது:

British Tamils Forum (BTF): +447814486087, info@britishtamilsforum.org

Centre de Protections des Droits du Peuple Tamoul-France: 0033652100400, mte.france@gmail.com

Irish Tamils Forum (ITF): 0035389959270, irishtamilsforum@gmail.com

Solidarity Group for Peace and Justice (SGPJ – South Africa): padayacheepregasen@gmail.com

Swiss Tamil Action Group (STAG): +41764450642, swisstamilag@gmail.com

Tamil Movement Against Genocide (Mauritius): +230 5728 5505, tamilmagen0@gmail.com


tasty
தமிழா
TM
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

# இமாலயாப் பிரகடனம் யாருக்கு?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



கடந்த சில வாரங்களுக்குள் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் தமது தாயக அரசியலில் தாக்கத்தை செலுத்தும் நோக்கத்தோடு, சில நகர்வுகளை முன்னெடுத்திருக்கிறார்கள். இதில் முதலாவது, ஒஸ்திரேலியாவை சேர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் சிலர் அமெரிக்காவைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களோடு இணைந்து புதுடெல்லியில் சில சந்திப்புகளை ஒழுங்குப்படுத்தியிருக்கிறார்கள். இச்சந்திப்புக்களில் தாயகத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு ஆதீனத்தின் தலைவரும் சென்றிருக்கிறார்கள். இவர்களை இந்திய ஆளும் கட்சியாகிய பாரதிய ஜனதாவின் முக்கியஸ்தர்கள் சிலரும் பாரதிய ஜனதாவின் இதயம் என்று கருதப்படும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த சிலரும் சந்தித்திருப்பதாக தகவல்.

மேலும், டெல்லியில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஈழம் தொடர்பாக ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. “ரத்தம் சிந்தும் ஈழம்” என்பது அந்நூலின் தலைப்பு ஆகும்.

மேற்படி சந்திப்புகளின் போது தாயகத்திலிருந்து சென்றவர்கள் சில விடயங்களை இந்தியத் தரப்புக்குத் தெரிவித்திருக்கிறார்கள். முக்கியமாக ஒரு பொது ஜன வாக்கெடுப்பு தமிழ் மக்கள் மத்தியில் நடத்தப்பட வேண்டும் என்பதும் இந்திய இலங்கை உடன்படிக்கையை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்பதும் தற்பொழுது நிகழும் சிங்கள பௌத்த மயமாக்கல், நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவற்றுள் முக்கியமானவை.

அவர்களைச் சந்தித்த இந்தியத் தரப்பு சில விடயங்களை உணர்த்தியிருக்கின்றது. ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு இந்தியா விரும்பாது என்பது முதலாவது விடயம். இரண்டாவது விடயம்,தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு ஒரே குரலில் பேச வேண்டும் என்பது.

தாயகத்திலிருந்து சென்ற குழுவைப் பொறுத்தவரையிலும் அவர்கள் ஒரே நிலைப்பாட்டை கொண்டவர்கள் அல்ல. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இருவரும் சமஸ்டிக் கோரிக்கையை முன் வைப்பவர்கள். விக்னேஸ்வரன் அதைவிட உயர்வான அமெரிக்காவில் உள்ளது போன்ற confederation என்ற தீர்வை முன் வைத்தாலும், இடைக்கால ஏற்பாடாக, 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டு வருகிறார். மூன்றாவது, சிவாஜி லிங்கமும் ஆதீன முதல்வரும். இருவரும் பொதுஜன வாக்கெடுப்பைக் கேட்பவர்கள். இவ்வாறு தாயகத்தில் இருந்து சென்ற அணி மூன்று வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும் அவர்கள் சில விடயங்களை ஒரே குரலில் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இச்சந்திப்பு நடந்த குறுகிய கால இடைவெளிக்குள மற்றொரு புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பாகிய உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பு கொழும்புக்கு வருகை தந்தது. இவர்கள் அங்கே பௌத்த மத பிடாதிபதிகளோடு உரையாடி ,அவர்களிடம் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்ட பின் அரசாங்கத்தையும் சந்தித்திருக்கிறார்கள். சந்திப்பின்போது ஒரு முக்கியமான விடயம் வெளியே வந்தது. அதுதான் “இமாலயா பிரகடனம்.”அது என்ன இமாலயா பிரகடனம்? நேபாளத்தின் தலைநகராகிய காட்மண்டுவில் நடந்த ஒரு சந்திப்பின் பின், உலகத்தமிழர் பேரவையும் பிக்குகளும் இணங்கிக்கொண்ட விடயங்கள் அந்தப் பிரகடனத்தில் உள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கையிலிருந்து பௌத்த மத பீடங்களை சேர்ந்த குறிப்பாக முற்போக்கான சிந்தனைகளைக் கொண்ட பிக்குகள் நேபாளத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு அவர்கள் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோடு உரையாடி இனப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் சில உடன்பாட்டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறு சென்ற பௌத்த மதத் தூதுக் குழுவானது தமது உயர் மட்டத்திற்கு விடையங்களைத் தெரிவித்து விட்டுத்தான் நேபாளத்துக்கு சென்றதா என்பது தெரியவில்லை. அத்தூதுக்குழுவில் இடம்பெற்றவர்கள் கடுமையான இனவாத போக்கு இல்லாத முற்போக்கு பண்பு நிறைந்த பிக்குகள் என்று கூறப்படுகின்றது. இவர்களோடு இணைந்து ஒரு பிரகடனத்தை தயாரித்த பின், உலகத் தமிழர் பேரவையானது கொழும்பிற்கு வருகை தந்திருக்கிறது.

முதலில் ஜனாதிபதியைச் சந்தித்த அக்குழுவினர் பின்னர் யாழ்ப்பாணத்திற்கும் கிழக்குக்கும் விஜயம் செய்தார்கள். யாழ்ப்பாணத்தில் அக்குழு குடிமக்கள் சமூகத்தை சந்தித்திருக்கிறது.

உலகத் தமிழர் பேரவையின் முக்கியஸ்தர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில், பௌத்த பீடாதிபதிகள் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவின் அரசியலைப் பொறுத்தவரையிலும் பௌத்த மகா சங்கங்கள் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை. இலங்கைத் தீவைப் பொறுத்தவரை பௌத்தம் ஓர் அரசமதம். அதற்கு யாப்பில் முக்கிய இடம் உண்டு. பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை தீவின் யாப்பு கூறுகின்றது. மேலும் கடந்த காலங்களில் இலங்கைத்தீவில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் மகா சங்கத்தினர் குழப்பியிருக்கிறார்கள். இப்பொழுதும் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கூடாது என்று கேட்டு ஒரு பகுதி மகா சங்கத்தினர் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறார்கள்.

இவ்வாறான ஓர் அரசியல் பின்னணியில், இலங்கைத் தீவின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்று ஆகிய பௌத்த மகா சங்கத்தோடு உரையாட வேண்டும் என்பதில் சந்தேகம் கிடையாது.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக வந்த பின் அவ்வாறு ஒரு முயற்சியை முன்னெடுத்தார். ஆனால் அம்முயற்சி எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.ஒரு பௌத்த பீடத்தைச் சேர்ந்தவர் அவரை உபசரித்து உரையாடினார். இன்னொரு பௌத்த பீடத்தைச் சேர்ந்தவர்கள் அவருக்கு உயரம் குறைந்த சிறிய ஆசனம் ஒன்றைக் கொடுத்து அவமதித்ததாக ஒரு தகவல். அதன்பின் பௌத்த மகா சங்கத்தைச் சந்திப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் பெரிய அளவில் அக்கறை காட்டவில்லை. இப்படிப்பட்டதோர் மத, அரசியற் சூழலில்தான் உலகத் தமிழர் பேரவை மேற்படி பிரகடனத்தைத் தயாரித்திருக்கிறது.

ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால், உலகத் தமிழர் பேரவையானது இதுதொடர்பாக தாயகத்தில் உள்ள கட்சிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் குடிமக்கள் சமூகங்களோடு ஏன் முன்கூட்டியே கலந்து பேசி ஒரு முடிவை எடுக்கவில்லை? என்பதுதான்.

உலகத் தமிழர் பேரவை மட்டுமல்ல, அவுஸ்திரேலியாவில் இருந்து டெல்லிச் சந்திப்புகளை ஒழுங்குபடுத்திய செயற்பாட்டாளர்களும் அதுதொடர்பாக தாயகத்தில் உள்ள கட்சிகளையும் குடிமக்கள் சமூகங்களையும் கலந்து பேசியதாகத் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக, உலகத் தமிழர் பேரவையானது ஏற்கனவே சுமந்திரனுக்கு நெருக்கமான ஒன்றாகப் பார்க்கப்பட்டது. ஆனால் இம்முறை அவர்கள் சுமந்திரனை சந்தித்த செய்திகள் ஊடகங்களில் வெளிவரவில்லை. அரசியல்வாதிகளைச் சந்திப்பதை விடவும் குடிமக்கள் சமூகங்களையும் மதப் பிரிவினரையும் சந்திப்பதில்தான் அவர்கள் அதிகம் அக்கறை காட்டியதாகத் தெரிய வருகிறது.

புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் தாயகத்தின் அரசியலில் ஏதோ ஒரு தாக்கத்தை செலுத்த முற்படுகிறார்கள் என்று தெரிகிறது. அது ஒரு யதார்த்தம். ஏனெனில், ஈழத் தமிழ் அரசியல் சமூகம் என்று பார்க்கும் பொழுது அதற்குள் புலம்பெயர்ந்த தமிழர்களும் வருகிறார்கள். குறிப்பாக, முதலாம் தலைமுறை புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தை விட்டுப் பிரிந்த ஏக்கத்தோடு தாயகத்தின் அரசியலில் ஏதோ ஒரு விதத்தில் தலையீடு செய்ய முற்படுகிறார்கள். அது தவிர்க்க முடியாததும் கூட. ஆனால் இங்கே பிரச்சினை எதில் வருகிறது என்றால், புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்தில் வசிக்கும் தமிழர்களுக்கும் இடையே ஒன்றிணைந்து முடிவுகளை எடுக்கத்தக்க கட்டமைப்புகள் எதையும் இல்லை என்பதுதான். அதாவது ஒருமித்த முடிவுகள் எடுக்கப்படுவதில்லை.

இது இந்தியாவைக் கையாளும் விடயத்திலும் சரி, மகா சங்கத்தைக் கையாளும் விடயத்திலும் சரி,ஐநா மனித உரிமைகள் பேரவையைக் கையாளும் விடையத்திலும் சரி, அமெரிக்காவைக் கையாலும் விடயத்திலும் சரி, எங்கேயும் ஒருமித்த நிலைப்பாடும் ஒன்றிணைந்த செயல்பாடும் கிடையாது.

இந்தியாவுக்கு தாயகத்திலிருந்து ஒரு குழுவை அழைத்த புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர்கள், அந்தக் குழுவை எந்த அடிப்படையில் தீர்மானித்தார்கள்? இது முதலாவது கேள்வி. அந்தக் குழு தாயகத்தில் உள்ள எல்லாத் தரப்புகளையும் பிரதிநிதித்துவப் படுத்தியதா? இது இரண்டாவது கேள்வி. அந்தக் குழுவானது தாயகத்தில் தனக்கிடையே ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்திருந்ததா? இது மூன்றாவது கேள்வி. அப்படித்தான் பௌத்த மகா சங்கத்தை அணுகும் விடயத்திலும் உலகத்தமிழர் பேரவையானது அது தொடர்பாக தாயகத்தில் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களோடும் குடிமக்கள் சமூகங்களோடும் உரையாடியதா? குறைந்தபட்சம் தாயகத்தில் உள்ள மதத் தலைவர்களோடு உரையாடியதா?

மேற்படி குழுவினர் யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனத்தைச் சந்தித்த பொழுது அச்சந்திப்பில் சிவ பூமி அறக்கட்டளையின் தலைவரான ஆறு திருமுருகனும் கலந்து கொண்டார். அவர் அங்கே உரை நிகழ்த்தியபோது, உங்களை எனக்குத் தெரியாது என்று கூறினார். அதாவது மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு அவரை அதற்கு முன் சந்தித்திருக்கவில்லை.

அதுபோலவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவராகிய கஜேந்திரக்குமாரை சந்திப்பதற்கு உலகத்தமிழர் பேரவை முயற்சித்திருக்கின்றது. அது தொடர்பாக முகநூலில் அவர்கள் விடுத்த அழைப்பும் அதற்குக்கே கஜேந்திரக்குமார் வழங்கிய பதிலும் வெளிவந்திருக்கின்றன. அதில் கஜேந்திரக்குமார் உலகத் தமிழர் அமைப்பை விமர்சித்து கருத்து தெரிவித்திருக்கிறார். மாவீரர் நாளை அனுஷ்டிக்க விடாமல் தடுத்த ஓர் அரசாங்கத்துக்கு நீங்கள் வெள்ளை அடிக்க முற்படுகிறார்கள் என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார்.

உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை போன்ற ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளை கஜேந்திரகுமார் ஏற்றுக் கொள்வதில்லை. அவை அவர்கள் வாழும் நாடுகளின் அரசாங்கங்களின் கருத்துக்களை பிரதிபலிப்பதாக அவர் ஒருமுறை குற்றம் சாட்டியிருந்தார். அந்த அமைப்புக்கள் அவரோடு தொடர்பு கொள்ள முயற்சித்த போதெல்லாம் அவர் அதனைத் தவிர்த்தும் வந்திருக்கிறார்.

புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளோடு மட்டுமல்ல, தாயகத்திலும் சக கட்சிகளோடு கஜேந்திர குமாருக்குள்ள உறவு பலவீனமானதுதான். அந்த ஒரு கட்சி எதிர்ப்பதை வைத்து அதையே ஏனைய கட்சிகளின் நிலைப்பாடாக எடுக்கத் தேவையில்லை என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படலாம். உண்மைதான். ஆனால், அடுத்த ஆண்டு ஒரு ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க ஐநாவை ஏமாற்றுவதற்காக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க முயற்சிக்கின்றார். நாடு பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியில் தங்கியிருக்கின்றது.

இப்படிப்பட்டதோர் அரசியல் பொருளாதாரச் சூழலில், அரசாங்கம் சிங்கள பௌத்த மயமாக்கலையும் நிலப் பறிப்பையும் முடுக்கி விட்டுள்ளது. அதாவது பன்னாட்டு நாணய நிதியாத்தாலோ அல்லது ஐநாவாலோ அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியற் பொருளாதாரப் பின்னணியில், தாயகத்தில் உள்ள தரப்புகளைக் கலந்தாலோசிக்காமல் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் தனியோட்டம் ஓடுவது தொடர்பில் கஜேந்திரக்குமார் முன்வைக்கும் சந்தேகங்கள் ஆதாரமற்றவை என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மேற்படி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கு உண்டு.




EASY FURNITURE
ஈஸி ஃபர்னிச்சர்
McNicoll Ave
Dynamic Dr
ARMDALE
Markham Convention Centre
Tapscott Rd
ORDER TODAY 416-293-9204
easyfurniture
easyfurnitureca
MON - FRI 11:00AM - 8:00PM
SAT & SUN 11:00AM - 6:00PM
Winter
Special Sale
நம்பி வாங்க!
சந்தோஷமா போங்க...
3 Pcs Sofa Set
Sofa & Love Seat $649
3 Pc Sofa $749
Single Bed $145
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1299
3 Pcs Sofa Set Air Leather Recliners
Sofa & Love Seat $1049
Bunk Bed $449
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1349
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1399
Folding Bed $149
Including Free Ottoman
Sectional Sofa $849
Sofa Bed $649
Queen Size Leather Bed $199
5 Pcs
Dining Table $399
Bunk Bed with Storage $899
7 Pcs
Dining Table $549
5 Pcs
Dining Table $399
Coffee Table $89
L Sectional Sofa $399
Sami Madam
Price Starting from $99
We Can Make Special Order
Free Ottoman Starting From $59
Coffee Table $89
5" Single Foam $59
Dreamopedic Single Mattress $149
Rest-O-Pedic Queen $249
Velvet Rose Queen Mattress $299
Wardrobe Starting From $199
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7
நாங்களே உற்பத்தி செய்து விரும்பிய அளவுகளில் செய்து கொடுக்கிறோம்




# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்
# வழங்கலும் கனடா ஸ்காபுறோ நகர்




தினம் கனடாவில
தளங்களிலுமிருந்து
பிதாக்களாக தேர்ந்
அனைவரும்
தகுந்த தண்டனை
உருத்திரகுமாரன்
டியாகவும் கலந்து
இவ்வருட
விழாவின்
விருதுகள் வழங்க
"பேர்ள்" அமைப்பி



























# வருடாந்த மாநாடும் விருது
# ரில் சிறப்பாக நடைபெற்றது

உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் அங்கத்தவர்களையும் அமைச்சர்களையும் பிரதமரையும் கொண்டு இயங்கிவரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 2023 ஆண்டிற்குரிய வருடாந்த மாநாடும் விருது வழங்கலும் கனடா ஸ்காபுறோ நகரில் "ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர்" மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திரு. ராகவன் பரஞ்சோதி தொகுத்து வழங்கிய இந்த விழாவ-ில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் உறுப்பினரும் நீண்ட கால அரசியல் செயற்பாட்டாருமான திரு. நிமால் விநாயகமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். அன்றைய

ன் பல பாகங்களிலுமிருந்து மத்திய அரசாங்கம். மாநில அரசாங்கம் மற்றும் மாநகர அரசாங்கங்கள். கல்விச் சபைகள் என அனைத்து அரசியல் பிரதிநிதிகள் கலந்து சிறப்பு சிறப்புரைகளை ஆற்றிச் சென்றார்கள் அவர்களில் இரண்டு முக்கிய அமைச்சர்கள் மற்றும் பெரிய நகரங்களின் நகர ந்தெடுக்கப்பெற்ற இருவர் உட்பட முக்கிய தலைவர்கள் அடங்கியிருந்தார்கள்.

ம் எமது தாயகத்தில் தமிழ் உறவுகளுக்கு இழைக்கப்பட்ட "இனப்படுகொலை" தொடர்பாக கண்டனங்களைத் தெரிவித்து, இலங்கை அரசிற்கு யை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமரும் அமெரிக்கா வாழ் வழக்கறிஞருமான விஸ்வநாதன் அவர்கள் இணைய வழி ஊடாகவும் சபாநாயகரும் இங்கிலாந்து வாழ் உறுப்பினருமான திருமதி. பாலாம்பிகை முருகதாஸ் நேர-கொண்டு பயனுள்ள உரைகளை ஆற்றினார்கள்.

விழாவில் "பறை" என்னும் விழா மலர் அதிக பக்கங்களுடன் பிரசுரிக்கப்பெற்று சபையோர்கள் மத்தியில் வழங்கப்பெற்றது.

சிறப்பு நிகழ்ச்சியாக வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது மூன்று சமூகப் பணியாளர்களுக்கும் ஒரு சர்வதேச அமைப்புக்கும் ப்பெற்றன. திருவாளர்கள் ராஜ் குணநாதன். பேராசிரியர் முருகேசு சிவபாலன், பேராசிரியர் இஸல்டீன் அபுலாஷ் ஆகியோருக்கும் சர்வதேச ற்கும் வழங்கப்பெற்றன. இவற்றுல் கனடா வாழ் திரு. ராஜ் குணநாதனுக்கு "தந்தை செல்வா ஞாபகார்த்த கௌரவ விருது" வழங்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கனடா வாழ் உ றுப்பினர் மரியாம்பிள்ளை மரியராசா நன்றியுரையாற்றினார். அப்போது ஊடகங்களின் ஆதரவிற்கும் சிறப்பான நன்றிகளைத் தெரிவித்தார்.

*(இங்கே காணப்படும் படங்கள் விழாவில் எடுக்கப்பெற்றவையாகும்.)*





















Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI

## Pawn Brokers



30 வருட சேவைகள்

## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.**™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வாஸ்துவின் பெயரால் வீட்டுக்குள் நுழையும் ஆகாயத் தாமரை: மூடநம்பிக்கை பெரும் சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் – பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை

அதிர்ஸ்ட மூங்கிலத்தைத் தொடர்ந்து வாஸ்துவின் பெயரால் இப்போது ஆகாயத்தாமரை வீடுகளுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளது. அந்நிய நீர்க்களையான ஆகாயத் தாமரையை அதிர்ஸ்டம் தரும் தாவரமாகப் பலரும் வீடுகளில் நீர்த்தொட்டிகளில் வளர்க்க ஆரம்பித்துள்ளார்கள். பூச்செடிகள் விற்பனையாளர்களும் பின்விளைவுகளை அறியாது இதனை விற்பனை செய்யத்தொடங்கி உள்ளார்கள்.

இந்தப்போக்கு மிகவும் ஆபத்தானது. மூடநம்பிக்கை சூழற்பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.





ஆகாயத் தாமரை வீடுகளில் வளர்க்கப்படுவது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், இயற்கை எந்த உயிரியையுமேதேவையற்றுப்படைப்பதில்லை. ஒவ்வொரு உயிரியும் முக்கியத்துவம் மிக்கவை. அவை பரிணாமிக்கும் சூழலின் சமநிலையில் இன்றியமையாத பங்களிப்பை நல்கி வருகின்றன. ஆனால், அவை இயற்கையாகத் தோன்றிய பிரதேசத்தில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்படும்போது அவற்றுள் சில இனங்கள் ஆக்கிரமிப்பு இனங்கள் ஆகிவிடுகின்றன.

புதிய சூழலின் சமநிலையைக் குழப்பிச் சரிசெய்யமுடியாத அளவுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. உலகின் உயிர்ப்பல்வகைமையை அழித்துவரும் பிரதான காரணிகளில் ஒன்றாக இவ்வந்நிய ஊடுருவல் இனங்கள் உள்ளன. அத்தகைய ஒரு அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரமே ஆகாயத்தாமரை ஆகும்.



ஆகாயத் தாமரை தென் அமெரிக்காவைத் தாயகமாகக்கொண்ட ஒரு அசுர நீர்க்களை. நீரே தெரியாத அளவுக்கு விரைந்து மூடிவளரும் ஆற்றல் பெற்றவை. இதனால், நீர்ச்சூழற் தொகுதியில் ஏனைய உயிரினங்களின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு, நுளம்புகளின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.

குளங்களில் இருந்து தப்பிச்செல்லும் இக்களை வயல் நிலங்களில் பல்கிப்பெருகி நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. இதனால், இலங்கை அரசாங்கம் ஆகாயத் தாமரையை அந்நிய ஊடுருவல் ஆக்கிரமிப்பு இனமாகக் கருதி அழிக்கத் தலைப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆரியகுளத்திலிருந்து இதனை முற்றாக அகற்றுவதற்கு மிகப் பெருந்தொகைப் பணமும் பெருங்காலமும் எடுத்தது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

இன்னும் ஏராளமான குளங்கள் ஆகாயத் தாமரையின் ஆக்கிரமிப்புக்குள் திணறிக்கொண்டிருக்கும் நிலையில் அதிர்ஸ்ட தேவதை என்ற அந்தஸ்தை வழங்குவது அதற்கு அசுரப் பலத்தைப் பெற்றுக்கொடுத்துவிடும்.

வீடுகளிலிருந்து தவறுதலாக வெளியேறும் இதன் சிறு அரும்பே அதன் பல்கிப்பெருகும் ஆற்றலால் சூழலை அதன் ஆக்கிரமிப்பின்கீழ் விரைந்து கொண்டுவந்துவிடும். ஏற்கனவே பார்த்தீனியம், சீமைக்கருவேலம், இப்பில்இப்பில் போன்ற அந்நியன்களால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் எம் நிலம் ஆகாயத் தாமரையினாலும் வலிகளைச் சுமக்க நேரிடும். எமது விவசாயத் திணைக்களம் ஆகாயத் தாமரை தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்த முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மீண்டும் மீண்டும் மனித உயிர்களை குடிக்க திட்டமிட்டுள்ளனரா வட்டுக்கோட்டை பொலிஸார்!

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகி சித்தங்கேணி இளைஞன் அலெக்ஸ் உயிரிழந்த பின்னர் வட்டுக்கோட்டை பொலிஸார் வீதித் தடை போட்டுள்ளனர்.

இந்த வீதித் தடையினை சம்பந்தமே இல்லாமல் போட்டு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் குறித்த வீதித் தடையானது மனித உரிமைகளை மீறும் அளவிற்கு காணப்படுகிறது. அதாவது குறித்த வீதித் தடையில் குத்தக் கூடிய கூரான கம்பிகள் காணப்படுகின்றன.

குறித்த வீதியால் பயணிப்பவர்களது வாகனத்தில் ஏதாவது தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டோ அல்லது வேறு விதமாகவே அந்த வீதித் தடையுடன் மோதி விபத்து சம்பவித்தால் அதில் உள்ள கூரான கம்பிகள் குத்தி உயிராபத்து ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. குறித்த வீதித் தடைக்கு நீதிமன்ற அனுமதி பெறப்பட்டதா என பொலிசாரை வினவியவேளை அவர்கள் அதற்கு பதில் கூறவில்லை.

குறித்த வீதியானது காரைநகர் கசூரினா கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியாக காணப்படுகிறது. இந்த வீதியால் நாளாந்தம் சுற்றுலா பயணிகளின் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் பயணிக்கின்றனர்.



குறித்த வீதியால் பயணிக்கும் அனைத்து பயணிகளும் மிகுந்த இன்னலின் மத்தியிலேயே பயணத்தை மேற்கொள்கின்றனர். புதிதாக வரும் இன்னும் சிலர் குறித்த வீதியால் பயணிக்க முடியாது என கருதி திரும்பிச் செல்வதுடன் மாற்றுப் பாதையையும் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

மக்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டிய பெலிசார், அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதுடன், அவர்களது அன்றாட பயணங்களிலும் இன்னல்களை ஏற்படுத்துவது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்துகின்றது.

(குறிப்பு - பின்னால் உள்ள, உயரமான கறுப்பு வீதித் தடையில் குத்தக்கூடிய கூரான 6 அங்குலத்திற்க்கும் நீளமான கம்பிகள் ஒட்டப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.)

# உடுப்பிட்டி பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி!



உடுப்பிட்டி பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து அதற்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் கலந்துரையாடல் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் பங்குபற்றலுடன் சனிக்கிழமை மாலை உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலையத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

கரவெட்டி பிரதேச செயலாளர் நேரடியாகவும் வாய் மொழி மூலமாகவும் மாவட்ட ஒருக்கிணைப்பு குழு தலைவர் தனக்கு அறிவுறுத்தியதனால் தான் இடத்திற்கான சிபார்சினை வழங்கியதாக குறிப்பிட்டதற்கு இணங்க சமூகமட்ட அமைப்புக்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

# மன்னாரில் உள்ள தபாலகங்கள் மூடப்பட்டுள்ள மையினால் மக்கள் பாதிப்பு



- மன்னார் நிருபர் (11-12-2023)

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி 48 மணித்தியால பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள விடுத்த அழைப்பின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தபாலகங்கள் திங்கள் (11) காலை முதல் மூடப்பட்டுள்ளன.

மேலும் மன்னார் பிரதான தபாலகம் தினம் (11) மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

தபால் ஊழியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் காரணமாக தபால் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக பல்வேறு தேவைகள் நிமித்தம் தபாலகங்களுக்கு வந்த பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதை காணமுடிந்தது.

இன்றும், நாளையும் (12) தபாலகங்கள் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தபால் சேவையை பெறவுள்ள மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் மரணம் – உடற்கூறுகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு!



திருமணம் ஆகி ஒரு வருடமேயான இளம் குடும்பப் பெண் ஒருவர் இன்றையதினம் உயிரிழந்துள்ளார். உடுவில் - கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் துசீந்தினி (வயது 26) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணிற்கு திருமணமான நிலையில் அவரது கணவர் புலம்பெயர் நாட்டில் வசித்து வருகின்றார். குறித்த பெண்ணுக்கு கடந்த 11ஆம் திகதி உடல் சுகயீனம் ஏற்பட்டது. இதன்போது அவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் நேற்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் அவரது உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பெண்ணின் மரணம் அந்தப் பகுதி மக்களை துயரில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News




# வவுனியா பிரதேச செயலகத்திற்கு எதிராக கலைஞர்கள் குற்றச்சாட்டு


(12-12-2023)

2023 ஆம் ஆண்டுக்கான வவுனியா பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் "கலாநேத்திரா விருதின்" தெரிவுகள் துறைசார்ந்த நிபுணர்கள் இன்றி இடம்பெற்றுள்ளதாக கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த விருதானது நாடக எழுத்துரு, கீழைத்தேச இசை, மேலைத்தேய இசை, பரதம், குறும்படம், ஊடகம், மரபு இசை உட்பட 18 துறைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும், ஐந்து பேர் கொண்ட துறை சார்ந்த நிபுணர்களால் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும், வவுனியா பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்த தாகக் கூறப்படுகிறது.

எனினும் வெற்றியாளர்கள் அவ்வாறு தெரிவு செய்யப்படவில்லை எனவும், இதனால் பல திறமையான கலைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# வடக்கில் சிங்கள குடும்பங்களுக்கு அபிவிருத்தி என்ற போர்வையில் காணி! பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டு



- மன்னார் நிருபர் (12-12-2023)

மன்னார் மாவட்டத்தை விவசாயத்தில் அபிவிருத்தி செய்வது என்ற போர்வையில் கீழ் மல்வத்து ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த திட்டத்தால் அநுராதபுரத்தில் 1500 சிங்களக் குடும்பங்கள் தமது காணிகளை இழக்கின்றார்கள் என்ற பொய்யான புள்ளி விபரத்தின் கீழ் இவர்களுக்கு தமிழர்களின் பூர்வீக இடமான வவுனியா செட்டிகுளம் பகுதியில் கப்பாச்சி என்ற பிரதேசத்தில் காணிகளை வழங்கும் ஏற்பாடு நடக்கின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

இந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு யு.என்.டி.பி. நிறுவனம் நிதி உதவி செய்கின்றதா? இந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு ஐ.நா. நிறுவனங்கள் துணை புரிகின்றனவா? என கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (11) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் பேசுகையில்,



போரால் அழிக்கப்பட்ட எமது தேசத்தில் விவசாயத்தை கட்டி எழுப்ப அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக பிரகடனப்படுத்தி விசேடமான நிதி ஒதுக்கீடுகள் மூலமும் விசேட சலுகைகளை அறிமுகப்படுத்தியும் விவசாயத்துறை, வர்த்தகத்துறை, கடற்தொழித்துறை, உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் வடக்கு முற்றாக அழிக்கப்பட்டு அந்த மக்களின் பொருளாதாரம் மண்ணோடு மண்ணாக்கப் பட்டுள்ள நிலையில் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கும் நோக்கோடு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா பகுதியில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த கொக்குத்தொடுவாய் மேற்கில் இருக்கக்கூடிய 7 கிராம சேவையாளர் பிரிவுகளில் 1984 ஆம் ஆண்டு பலவந்தமாக தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

அவர்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. அவர்களின் இடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

முந்திரிகைக்குளம், ஆமையன்குளம், அரியகுண்டான் குளம், சிலோன் தியேட்டர் உள்ளிட்ட குளங்கள் மிகவும் வளமான விவசாய நிலங்களையுடைய குளங்கள்.

இந்தப் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றப்பட்டு உள்ளதோடு அந்தப் பகுதிகளை போருக்கு பின்னர் அபிவிருத்தி செய்வதற்கானான 7000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அபிவிருத்திக்காக ஒட்டுமொத்த வடக்கு மாகாணத்திற்கே இந்தளவு நிதி ஒதுக்கப்படவில்லை என்றார்.

# கிளிநொச்சியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து: ஒருவர் பலி

(12-01-2023)

கிளிநொச்சி மாவட்டம் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது 11-12-2023 மாலை இடம்பெற்றுள்ளது.

தருமபுரம் பகுதியில் இருந்து ராமநாதபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், இராமநாதபுரம் பகுதியில் இருந்து தருமபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




இராமநாதபுரம் கல்மடு நகர் பகுதியைச் சேர்ந்த கனகரத்தினம் கோசிகன் (வயது 33) என்பரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

காயமடைந்ததில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதோடு மற்றும் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கம் அங்குரார்ப்பணம்


முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு சிறந்த நாளைய தினத்திற்கான இளமையான மற்றும் ஆரோக்கியமான மனதை உருவாக்குவதற்கான விருப்பமான தெரிவாக சதுரங்க விளையாட்டை இளம் சந்ததியினர் மத்தியில் ஊக்கப்படுத்துவதை தொலைநோக்கக் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கத்தின் (Mullaitivu District Chess Association) அங்குரார்ப்பணம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி திரு. எஸ். தனஞ்செயன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுன் 15 பேர் அடங்கிய நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கம் பின்வரும் குறிக்கோள்களை இலக்காக் கொண்டு பல்வேறு செயற்பாடுகளை 2024 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்த இன்றய அங்குரார்ப்பண நிகழ்வில் தீர்மானிக்கப்பட்டது.

1. சதுரங்கத்தின் கொள்கைகளையும் அது வாழ்க்கைக்கும் தீர்மானமெடுப்பதற்கும் எவ்வாறு பங்களிக்கும் என்பதை கற்பித்தல்.
2. முல்லைத்தீவு மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டில் ஆர்வத்தை ஊக்குவித்தல் மற்றும் தூண்டுதல்.
3. சதுரங்கக் கழகங்கள், சங்கங்கள் மற்றும் கல்விக்கூடங்களின் உருவாக்கத்தை ஊக்குவித்தல்.
4. முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட, தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளை ஒழுங்கமைத்தல் அல்லது ஒருங்கிணைத்தல்.
5. இலங்கை மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் சதுரங்கப் போட்டிகளில் மாவட்ட வீரர்கள் பங்கேற்பதை எளிதாக்குதல்.
6. மதிப்பிடப்பட்ட விளையாட்டுகளில் அவர்களின் செயல்திறன் அடிப்படையில் சதுரங்க வீரர்களை தரப்படுத்துதல்.
7. மேற்கூறியவற்றை அடைவதற்கு தேவையான அனைத்து நிர்வாக செயல்பாடுகளையும், நிதி திரட்டல் மற்றும் பிற செயல்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.

இன்று இடம்பெற்ற திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.சி.குணபாலன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.முகுந்தன் முல்லைத்தீவு மாவட்டத்தில் சதுரங்க விளையாட்டில் ஆர்வத்துடன் செயற்படும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வட மாகாணத்தில் கைத்தொலைபேசியை பார்த்துக் கொண்டு பேரூந்து ஓட்டும் சாரதி




(12-12-2023)

நீண்ட நேரமாக கைத்தொலைபேசியை பார்த்துக் கொண்டு அரச பேரூந்தை ஓட்டிச் சென்ற சாரதியின் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

வட மாகாணத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் கடந்த திங்கட்கிழமை (11) அன்று 12:30 மணியளவில் கிளிநொச்சி வவுனியா வழியாக பயணத்தை மேற்கொள்ளும் பேரூந்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிகளவான மக்கள் பொதுப்போக்குவரத்தை நம்பி பயணம் செய்கின்ற நிலையில் அண்மைக்காலமாக சாரதிகளின் கவனயீனம் காரணமாக பெறுமதியான பல உயிர்கள் பல்வேறு பகுதிகளில் பலியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி பாடசாலையின் பெயர் திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளது – சுகாஷ் சீற்றம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்





ஸ்ரீ லங்கா விபாக தெபார்தமேந்துவ
இலங்கை பரீட்சைத் திணைக்களம் / DEPARTMENT OF EXAMINATIONS, SRI LANKA
முழுப்பெயரும் முகவரியும் / FULL NAME AND ADDRESS

KN/NACHCHIKUDA GOVT. TAMIL MIXED SCHOOL,
POONAKARY,
36034

பெறுபேற்று அட்டவணை / RESULTS SCHEDULE
க.பொ.த(சா.த)ப் பரீட்சை G.C.E.(O/L) Examination 2022(2023)

Centre No. 3439 Index No.

Full Name of the Candidate
IRUTHAYARASA YAZHSA

| Subject | Medium | Grade | SBA Level |
|---|---|---|---|
| 12 - SAIVANERI | TAMIL | C - CREDIT PASS | 3 |
| 22 - TAMIL LANGUAGE & LITERATURE | --- | B - VERY GOOD PASS | 1 |
| 31 - ENGLISH LANGUAGE | --- | W - WEAK | 2 |
| 34 - SCIENCE | TAMIL | S - ORDINARY PASS | 3 |
| 32 - MATHEMATICS | TAMIL | C - CREDIT PASS | 1 |
| 33 - HISTORY | TAMIL | S - ORDINARY PASS | 3 |
| 60 - BUSINESS & ACCOUNTING STUDIES | TAMIL | S - ORDINARY PASS | 1 |
| 42 - MUSIC (CARNATIC) | TAMIL | - ABSENT | 2 |
| 86 - HEALTH & PHYSICAL EDUCATION | TAMIL | C - CREDIT PASS | 3 |

Date: 10/11/2023

| Passes | | | | Total |
|---|---|---|---|---|
| A | B | C | S | |
| 0 | 1 | 3 | 3 | 7 |

H.J.M.C. Amith Jayasundara
Commissioner General of Examinations



கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையானது தற்போது நாச்சிக்குடா அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை என பெயர்ப்பலகை வைக்கப்பட்டுளதுடன் தமிழ்ப் பாடசாலை என்ற அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவரது முகநூல் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 1955களில் திரு. சின்னத்தம்பி ஆசிரியர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

தற்சமயம் 55% தமிழ் மாணவர்களும் 45% முஸ்லீம் மாணவர்களும் கற்று வருகின்றனர். இது யுத்த காலம்வரை குறித்த பெயரிலேயே இயங்கி வந்துள்ளது.

ஆனால் அதன் பின் சில பிரகிருதிகளால் அ.த.மு.க (அரசினர் தமிழ் முஸ்லீம் கலவன்) பாடசாலை என்றும் தற்சமயம் அ.மு.க (அரசினர் முஸ்லீம் கலவன்) பாடசாலை என்றும் மோசடியாகப் பெயர்ப்பலகை வைக்கப்பட்டுத் தமிழ்ப் பாடசாலை என்ற அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது - மறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இற்றைவரை குறித்த பாடசாலையின் உத்தியோகபூர்வ பெயர் கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையே ஆகும்.

இதற்கு ஆதாரமாக இம்முறை வெளியாகிய க.பொ.த சா/த பரீட்சைப் பெறுபேற்றில் பாடசாலையின் பெயர் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே பாடசாலையில் திட்டமிட்டுக் கடந்த சில ஆண்டுகளாக மோசடியாகப் பெயர்ப்பலகை வைத்துத் தமிழின அடையாளங்களை அழித்து வருபவர்கள் யார்?

இந்தச் சதிக்கு உடந்தையாக இருந்தோர் - இருப்போர் யாவர்?

உடனடியாகப் பாடசாலையின் பெயர்ப்பலகையை கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (அ.த.க) என்று மாற்றுமாறு கோருகின்றோம்!




உங்கள் தமிழின அழிப்பிற்கு அப்பாவித் தமிழ் மக்களையும் முஸ்லீம் மக்களையும் பலிக்கடா ஆக்காதீர்கள்!

உண்மை நிலைநாட்டப் படாவிட்டால் சதிக்கு உடந்தையாக இருந்த அத்தனை நபர்களின் விபரங்களும் வெளியிடப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# கல்விக்கு பணம் தடையாக இருக்கக் கூடாது: உதவி செய்ய தயார் – தொழிலதிபர் தியாகி தெரிவிப்பு



கல்வி கல்வி கற்பதற்கு பணம்தான் தடையாக இருக்குமானால் அதனை இயன்றவரை நிவர்த்தி செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுனர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு கட்டடத்திற்கான புதிய நுழைவாயிலை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நானும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் இந்த நுழைவாயிலில் எனது பங்களிப்புடன் நிறைவாக கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டமையை இட்டு பெருமை அடைகிறேன்.

நாங்கள் கல்வி கற்ற காலங்களில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து எமது கல்வியை தொடர வேண்டிய இக்கட்டான காலப்பகுதியை எண்ணிப் பார்க்கும்போது தற்போதைய சூழல் மாணவர்களின் கல்விக்கு ஏற்றதாக இருக்கிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக பல குடும்பங்கள் நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன அவர்களுக்கு என்னால் ஆன உதவிகளை வழங்கி வருகிறேன்.

தெரிவு செய்யப்பட்ட பல ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த உதவித்தொகையை வழங்கி வருகின்ற நிலையில் மாணவர்களின் கல்விக்கு பணம் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவே வழங்கி வருகிறேன்.

அதேபோன்று யாழ் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களும் கல்விக்கு பணம் தடையாக இருக்கக்கூடாது.

அவ்வாறு அவர்களின் கல்வியை தொடர்வதற்கு பணம் தடையாக இருக்குமானால் பாடசாலை அதிபர் ஊடாக எனக்கு தெரியப்படுத்துங்கள் அவர்களின் குறைகளை நீக்க நான் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# 75வது மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக பாரிய கவனயீர்ப்பு போராட்டம்!

75ஆவது உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வட மாகாண சமூக மட்ட அமைப்புகள் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தனர்.

மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் 11-12-2023 காலை வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடை சட்டத்தை உடன் நீக்குதல், கொக்கிளாய் மனித புதைகுழிக்கு நீதியான - விரைவான விசாரணையை முன்னெடுத்தல், மனித சித்திரவதைகளை நிறுத்துதல், பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்துதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை விரைவுபடுத்துதல், பூநகரி - பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு, சிமெந்து தொழில்சாலை அமைப்பையும் உடன் நிறுத்துதல், மன்னார் தீவில் கனியமண் அகழ்வை உடன் நிறுத்துதல், மன்னார் தீவில் காற்றாலை மின்சாரத்தை அமைக்காது அதனை வேறுபகுதிக்கு மாற்றுதல் ஆகிய 8 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# யாழ்ப்பாணத்தில் தனிமையில் சென்ற பெண் மீது தாக்குதல்! நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் தனிமையில் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்கிவிட்டு நகைகளை கொள்ளையடித்து சென்றனர்.

அச்சுவேலி நாவற்காடு வீதியில் பாடசாலையொன்றுக்கு அருகில் திங்கட்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றது.

ஒரு பவுண் காப்பும் அரைப் பவுண் மோதிரமும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

தனிமையில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பெண் அணிந்திருந்த நகைகளை பறிக்க முயன்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதன்போது மழைக்கவச அங்கி மூலம் உடலை முற்றாக மூடி முச்சக்கர வண்டியொன்றில் வந்த மர்ம நபரொருவர் பெண்ணை தாக்கிய நிலையில் இருவரும் பெண் அணிந்திருந்த நகைகளை பறித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித உரிமை பாதுகாவலருக்கான வழிகாட்டல் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் உலக மனித உரிமை தினத்தின் 75 ஆண்டினை முன்னிட்டு "சகலருக்கும் கௌரவம், சுதந்திரம், மற்றும் நீதி சமவாயம்" என்னும் கருப்பொருளிலான மனித உரிமை பாதுகாவலருக்கான வழிகாட்டல் கலந்துறையாடல் யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் அமைந்துள்ள கலைத்தூது அழகியற் கல்லூரியில் இடம்பெற்றது.



30 உறுப்புரிமை அனைத்துல மனித உரிமை ஆவணத்தின் பிரகடனம், முக்கியத்தும் பற்றி தெளிவூட்டல்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் ரீ. கனகராஜ் தலைமையில் நடைபெற்றது.



இதில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பெண் உரிமையாளர்கள், குழு உரிமையாளர்கள், ஊடகவியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மனித உரிமை வரைவுபற்றி ஆவணம் தயாரித்தல் தொடர்பாடல் பற்றிய கலந்துறையாடலும் இதன்போது இடம்பெற்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தி/உ வர்மலைவிவேகானந்தாகல்லூரி — திறன்வகுப்பறை திறப்புவிழா

01.12.2023 வெள்ளிக்கிழமை காலை 7.45 மணிக்கு கல்லூரியின் முதல்வர் திரு. க. ரவிதாஸ் அவர்களின் தலைமையில் இந்நிகழ்வின் விருந்தினர்கள் அனைவரும் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட்வாத்தியம் முழங்க வரவேற்கப்பட்டு ஆரம்பப்பிரிவிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இலண்டன் மாநகரத்திலிருந்து வருகைதந்த நலன்விரும்பியான திரு. குமாரநாயகம் அவர்களால் ஆரம்பப்பிரிவிற்கான Smart ClassRoom கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது.

அந்நிகழ்வில் தலைமை உரையை பாடசாலை முதல்வர் திரு. க. ரவிதாஸ் அவர்களும் வரவேற்புரையை பிரதிஅதிபர் திரு. ம. பிரகாஸ் அவர்களும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்விற்கு வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து முன்பள்ளிக்கு பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. தவநாதன் அவர்கள் வருகைதந்து சிறப்பித்தார். அவர் சிறப்புரையாற்றும் போது வளர்ந்துவரும் பாடசாலையாக இப் பாடசாலை திகழ்கின்றது என்றும் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கத்தக்க வகையில் மாணவர்களை மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்தி அடைவுமட்டத்தை மேம்பாடடையச் செய்யவேண்டும் எனவும் கூறினார். அடுத்தகட்டமாக தரம் 5 மாணவர்களுக்கு திருமதி. செல்வநளினி சுரேஸ்குமரன் ஆசிரியரால் திண்மஉருக்கள் பற்றி நவீனதொழில்நுட்பத்துடன் கற்பிக்கப்பட்டது.



அதனைத்தொடர்ந்து இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கு நலன்விரும்பியான திரு. குமாரநாயகம் அவர்களால் சிறப்புரை ஆற்றப்பட்டது. இதில் மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் முகமாக இதன் பாவனையை தொடாச்சியாக பேணவேண்டும் எனவும் திறன் வகுப்பறை வசதி இல்லாத பின்தங்கிய பல பாடசாலைகளுக்கு மாணவர் நலன் கருதி இவ்வாறான வசதிகளை தங்கள் அமைப்பு மூலம் செய்து வருவதாகவும் கூறினார்.





இறுதியாக ஆரம்பப்பிரிவு பிரதிஅதிபர் திருமதி. த. விஸ்ணுகுமார் அவர்கள் தனது நன்றி உரையில் SMART BOARD எமது பாடசாலைக்கு கிடைத்தது ஓர் வரப்பிரசாதம் என்றும் இதன் மூலம் ஆரம்பக்கல்வியின் அடைவு மட்டத்தை மேம்படுத்த மிகவும் பயனுள்ளதாய் அமையும் என்றும் கூறி இத்தகைய நன்கொடையை வழங்கிய திரு. குமாரநாயகம் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு பாடசாலை சார்பில் நன்றிகளை தெரிவித்து நிகழ்வினை நிறைவு செய்தார்.

# இந்நாடு சிங்கள நாடல்ல, தமிழ்நாடுமல்ல, இலங்கை என்ற பன்மைத்துவ நாடு என்பது ஆரம்ப புள்ளியாக வேண்டும்

## - தேரர்களிடம் மனோ கணேசன்



இலங்கை என்ற எம் தாய்நாடு, ஒரு "சிங்கள பௌத்த நாடு" என்ற தமக்கு மட்டுமே என்ற சிந்தனை மறைய வேண்டும். இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான "தனித் தமிழ்நாடு" என்ற சிந்தனையும் மறைய வேண்டும். சகலருக்கும் சொந்தமான, இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்ப புள்ளியாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற, சிறந்த இலங்கைக்கான சங்க (பௌத்த) மன்றம், உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளுடனான சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

சிங்கள-பௌத்த நாடு என்ற சிந்தனை, இலங்கையில் நிரந்தர அமைதி, வளர்ச்சி, மகிழ்ச்சி ஏற்பட தடையாக இருக்கிறது என சந்திப்பில் கலந்துக்கொண்ட தேரர்களை நோக்கி சிங்கள மொழியில் கூறினேன். அதேவேளை இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான தனித் தமிழ்நாடு என்ற சிந்தனையும் மறைய வேண்டும் என சந்திப்பில் கலந்துக்கொண்ட உலகத் தமிழர் பேரவை அங்கத்தவர்களை நோக்கி தமிழிலும், ஆங்கிலத்திலும் கூறினேன்.

உங்களது இந்த முயற்சியை நாம் வரவேற்கிறோம். அரசியல்வாதிகளை, அரசியல் கட்சிகளை விலத்தி வைத்து விட்டு நேரடியாக நீங்கள் இந்த முயற்சி செய்வதும் இந்த முதற்கட்டத்தில் சரிதான். முதல் கட்டத்தை வெற்றிகரமாக கடந்து விட்டால், அடுத்த கட்டத்தில் அது அரசியல் கட்சிகளிடம்தான் வரவேண்டும். பாராளுமன்றத்தில்தான் இன்றைய சட்டங்கள் திருத்தப்பட முடியும். புதிய சட்டங்கள் உருவாக்கப்பட முடியும். ஆகவே அது வரும்போது வரட்டும்.

ஆனால், இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்ப புள்ளியாக இருக்க வேண்டும். இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற தமக்கு மட்டுமே என்ற சிந்தனை மறைய வேண்டும். இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான தனித் தமிழ்நாடு என்ற சிந்தனையும் மறைய வேண்டும். இந்த அடிப்படை ஆரம்ப புள்ளியாக ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் இந்த முயற்சிபயனற்றதாகி விடும்.

"76 விகிதம் சீனர்களை கொண்ட சிங்கப்பூர், அரசியல் சட்டப்படி தம்நாட்டு பன்மைத்துவத்தை கொண்டாட முடியும் என்றால், ஏன் இலங்கையில் எம்மால் அதை கொண்டாட முடியாது?" என்ற கேள்வியை முயற்சியில் ஈடுபடும் தேரர்களை நோக்கி நான் எழுப்பவில்லை. ஏனெனில் இம்முயற்சி வெற்றி பெறுவது பெருமளவில் அவர்கள் தரப்பில்தான் உள்ளது என்பது எனது அபிப்பிராயம். முதலிலேயே அவர்களை தளர்வடையச்செய்ய நான் விரும்பவில்லை. ஆனால், அடுத்த முறை இதை நான் கேட்பேன். இத்தகைய கேள்விகளை ஏற்கனவே பாராளுமன்றத்திலும், உள்நாட்டு மேடைகளிலும் நான் பலமுறை எழுப்பியுள்ளேன்.



# கடந்தவையும் கடப்பவையும் - (80)

*மீண்டும் வல்லைவெளிக் காற்று மெள்ளவுடல் வருட - அதுவரை*
*இல்லாத புத்துணர்வால் மனம் மகிழ*

*கனகாலம் காணாத இடங்களோடு - முன்*
*பலகாலம் பிணைந்திருந்த நினைவெல்லாம்*

*வந்துபோக வந்ததுதான் அந்நினைவும் - முன்னர்*
*எந்தநாளும் வந்துபோன பாதையதைக் கண்டபோது*

*அன்று,*

*உடுப்பிட்டிச் சந்தியை அண்டியே இருந்தது*
*சிறப்பாக கல்வியை நல்கிய தனியார் நிறுவனம் - இங்கு*

*முன்னமும் ஒருதரம் சொன்ன இடமது - அங்கு*
*எந்நாளும் பெருங்கூட்டம் வகுப்பினில் - அன்று*

*தத்துவத்துறையில் பெயர்போன ஆசான் - நல்ல*
*சத்தமாகப் படிப்பித்தார் வழமைபோல - திடீரென்று*

*வகுப்புக்குள் வந்தவர் புதியவர் சொன்ன*
*திகைப்புக்குரிய திகிலூட்டும் செய்தி*

*பறக்கச்செய்தது பலரையும் வெளியில் - முதலில்*
*புறந்தவர் பெடியள் மட்டுமே - ஒருவர்*

*வண்டியில் மூவராய்ச் செல்லவே - சிலர்*
*அண்ணடையில் தான் என ஓடியும் போகிறார் - சில*

*பெண்களும் விடவில்லை தாங்களும் செல்கிறார்*
*என்னதான் நடந்தது? வினவியபோது தான்*

*தெரிய வந்தது தெருவில் யாரோ*
*பெரிய பிழைசெய்ததால் தண்டிக்கப் பட்டாராம்*

*தண்டனை எதுவென சொன்ன போதிலே*
*'முண்டம்' தெரியாது முழித்து நின்றவள்*

*கொஞ்சம் கொஞ்சமாய் விளங்கிக் கொள்ளவே*
*மண்டை விறைத்தது மயக்கமும் வந்தது - அடுத்த*

*துண்டுளங்கோ? வீட்டுக்குப்போக மாட்டேன் என்றவள்*
*மன்றாடி நின்றாள் துணைக்கு அக்காவை*

*அக்காவும் வரவில்லை அவள் - தன்*
*அப்பாவை அனுப்பே அவரின் துணையுடன்*

*வீடுசென்றதும் விம்மி விம்மியே அழுகிறாள்*
*ஆராக இருந்தாலும் அதிகம் இதுவென*

*பெருங்கோபத்தோடு ஆவேசமாய் அழுகையும் தொடர*
*தெருவேரம் போனவர் தெரிந்தவர் அவரும்*

*அவர்பின் பலரும் தொடர்ந்தங்கு வரவே*
*எவருக்கு உண்டு இப்படி உரிமை?*

*ஆனாலும் அதிகம் ஏன் என்று கேட்க? - பலர்*
*பேசாமல் போக ஒருவரே சொன்னார் - 'உனக்கு*

*இப்ப விளங்காது எப்பவோ விளங்கும்' என்று*
*அப்போ அவர் சொன்னதை அடுத்தநாள்*

*அக்காவிடம் கோபத்தோடு சொன்னபோதும்*
*அக்காவும் சொல்கிறார் அவர்கட்காகவே - இப்படித்தான்*

*'நல்ல நெல் வேண்டுமெனில்*
*களையப்பட வேண்டும் களைகள்' என*

*ஓரிரு கொடிய தண்டனைகள் வேண்டுமோ*
*மாறிவரும் சீரழியும் இன்றைய போக்குக்கு - குறிப்பாக*

*இன்றைய காலத்து வாள்வெட்டுக்கட்கும் - சிறுவர்*
*சிந்தையைச் சீரழிக்கும் போதைப்பொருள் பழக்கத்திற்கும்*

*வளர்ந்த வளரும் பெண்களுக்கு எதிராக*
*தொடர்ந்து செல்லும் வன்முறைகட்கும்*

*அக்காவின் அக்கேள்வி அதுவாக இருக்குமோ*
*முற்றாகத் தெரியாது ஆனாலும் ஊகம்தான் ........*


(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "மக்களால் அங்கீகரிக்கப்படாத ஒரு ஜனாதிபதி அடுத்த தேர்தலில் வெல்வதற்காக இனவாதத்தை கையில் எடுத்து உரிமைக்காக போராடுகின்ற எம்மவர்களை அச்சுறுத்துகிறார்"

## "ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குவதற்கு உலகத்தமிழ் பேரவை மூலம் கூட்டமைப்பினர் முயற்சி -- அதனை நாங்கள் தோற்கடிப்போம்" என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி



**(கனகராசா சரவணன்)**

இன்று மக்களால் அங்கீகரிக்கப்படாதவரும் மக்கள் செல்வாக்கும் இல்லாதவருமான ஒரு ஜனாதிபதி ஏதோ ஒரு வகையில் தான் அடுத்த தேர்தலில் வெல்வதற்காக இனவாதத்தை கையில் எடுத்து உரிமைக்காக போராடுகின்ற எம்மவர்களை கடுமையாக அச்சுறுத்தி தன்னுடைய மக்கள் மத்தியில் சிங்கள பௌத்த தன்மையைக் காட்டி தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டால் சிங்கள பௌத்தர்கள் தங்களுக்கு வாக்கு போடுவார்கள் என்ற பேர்வையில் மட்டக்களப்பில் எமது அமைப்பாளர் உட்பட 10 பேரை கைது செய்து செயற்படுகின்ற பல விடையங்களை அதனுடைய ஓர் அங்கமாக பார்க்கின்றோம். 13வது திருத்தத்தில் ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குவதற்கு ஏக்கே ராஜ்சிய என்ற அரசியல் அமைப்பை சம்மந்தன் சுமந்திரன் போன்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாரித்து 2015 திணிக்க முற்பட்டு முடியாமல் போனதை கூட்டமைப்பின் ஒரு பங்காளி முகவர்களான உலகத் தமிழர் பேரவை மூலம் அரசே செய்யமுடியாத ஒரு காரியத்தை அவர்கள் செய்ய முயற்சிக்கின்றார்கள் அதனை நாங்கள் தோற்கடிப்போம் என நாடாளமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சூழுரைத்துள்ளார்.

மட்டக்களப்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் அவரது மகன் ஆகியோரை வியாழக்கிழமை (14) சிறைச்சாலைக்கு நாடாளமன்ற உறுப்பினர்களான பொ.கஜேந்திரகுமார். எஸ். கஜேந்திரன் கட்சி தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோர் சென்று பார்வையிட்ட பின்னர் பொ. கஜேந்திரகுமார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் "மாவீரர் நினைவேந்தலில் ஈடுபட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டு அமைப்பாளர் அவரது மகனையும் ஒரு அரசியல் பழிவாங்கலுக்காக சட்டவிரோதமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்துள்ளனர்.

அவர் நினைவு கூறுவதற்கு என சென்று பொலிசார் அதனை மறுத்தபோது திரும்பிய நிலையில் வாகனத்தில் சிவப்பு மஞ்சல் கொடிகள் கொண்டு சென்றதற்காக கைது செய்யப்பட்ட கூலிக்கு வந்த சாரதியும் வாகனத்தையும் கொண்டு செல்லுகின்றனர் என்ற காரணத்திற்காக அவருடன் பொலிஸ் நிலையத்துக்கு சென்றது மட்டும்தான் அமைப்பாளர் செய்த தவறு அவரை பழிவாங்கும் நோக்கத்துடன் அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வழக்குசார்ந்த விடையங்கள் தொடர்பாக மட்டு சிறைச்சாலையில் அவரை சந்தித்தோம் அவரின் உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது அவர் ஒரு சர்க்கரை வியாதி உடையவர் காலில் காயம் ஏற்பட்டதால் கால்வீங்கி சரியான வேதனையில் இருக்கின்றா அவரை வைத்தியசாலை கொண்டு செல்லவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார் இதனை உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பதில் அவருக்கு நீதிகிடைக்கும் என்ற நம்பிகை இருக்கின்றது.

இனவாதத்தை காட்டிவந்து சிங்கள மக்களுடைய வாக்குகளை பெறலாம் என எதிர்பார்க்கின்றார். ஆனால் பௌத்த மக்களுக்கு எந்தளவு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றார் என்பது அவரின் நாடகங்களை தாண்டி அந்த மக்கள் விளங்கி கொள்வார்கள் விசேடமாக இந்த வற் வரி அதிகரிப்பு சாதாரண நடுத்தரவர்க்கம் ஏழை மக்களுக்கு குறிவைக்கப்பட்டுள்ளது

ஆனால் நாட்டை அழித்த நேரடியாக வந்து கொள்ளையடித்து அரசு தரப்பின் செல்வாக்கை பயன்படுத்தி கோடிக்கணக்கில் இலாபம் தேடின தரப்புக்கள் இன்று எந்த விதத்திலும் வற்வரியில் பாதிக்கப்படபோவதில்லை கொள்ளையடி த்தவர்களுக்கு எதிராக இது வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை அதுமட்டுமல்ல கொள்ளையடித்தவர்கள் இன்று ஆட்சி பீடத்தில் ஒன்றாகியுள்ளனர்.

இந்தவகையில் இந்த நாட்டை கொள்கை ரீதியாக வந்து பொருளாதார ரீதியாக எந்தவிதமான அறிவும் இல்லாமல் நிபுணர்த்துவம் இல்லாதவர்கள் முடிவுகள் எடுத்து தங்களுடைய நெருங்கிய நண்பர்கள் உதவியாளர்கள் கொள்ளையடித்து கறுப்பு பணத்தை சேகரிப்பவர்கள் உடன் செயற்படுவதால் நாடு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

ஒரு அறிவும் இல்லாதவர்கள் ஆட்சி பீடத்தில் வந்து அவர்கள் எடுத்து முடிவின் காரணமாக சாதாரண பொதுமக்கள் இன்று முற்று முழுதாக அந்த பழிக்கு தள்ளப்பட்டுள்ளனர் ஆனால் அந்த பாரிய தவறை விளங்கி கொள்ளாமல் ஜனாதிபதி அவர் படிப்பில் ஒரு சட்டத்தரணி அவருக்கு பொருளாதாரம் சம்மந்தமாக நிபுணத்துவ அறிவு கிடையாது.

கோட்டாபாய ஒரு அறிவும் இல்லாது பிழையான முடிவுகளை எடுத்த போது இருந்தவர்கள் இப்போது ஜனாதிபதியை சுற்றிவர ஆலோசனை வழங்குகின்றவர்கள் ஆகவே இப்படிப்பட்ட நபர்கள் தொடர்ந்தும் எடுக்கின்ற முடிவுகளால் கொள்ளையடித்தவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

உண்மையில் கொள்ளையடித்தவர்கள் வெளிநாடுகளில் வைத்திருக்கின்ற பணத்தை நாட்டுக்கு கொண்டுவந்து பொருளாதார நெருக்கடிக்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது இந்த நாடு வீழ்வதற்கு சம்மந்தப்படாத நாட்டுக்கு நேர்மையாக உழைத்தவர்களுக்கு தான் வரி சுமையை செலுத்தப்படுகின்றது

ஒரு அரசியல் பழிவாங்கலுக்காக அரசை கடுமையாக நாங்கள் விமர்சிப்பதால் எமது அமைப்பாளர் மற்றும் எமது உறுப்பினர்கள் மீது பழிவாங்கல் செயற்பாட்டில் செயற்படுகின்ற அதே தரப்பு அறிவில்லாத காரணத்தினால் இன்று சிங்கள மக்களுடைய வாழ்க்கையில் அடிக்கின்ற நிலமை இருக்கினறது ஆகவே இந்த நாடகங்கள் நடித்து படு மோசமான மக்கள் விரோத செயற்பாடுகளை செய்யமுடியாது ஒரு நிலமை நிச்சயமாக உருவாகும் அதனை மக்கள் உணர்ந்து செய்யவேண்டிய பொறுப்பை சரியான கோணத்தில் எதிர்ப்பை தெரிவிப்பதன் மூலம் தடுத்து நிறுத்துவார்கள்.



சம்பந்தன் சுமந்திரன் போன்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு 13 திருத்தத்தில் ஒற்றையாட்சிக்குள் வந்து தமிழ் அரசியலை முடக்குவதற்கு 2015 ஏக்கே ராஜ்சிய என்ற அரசியல் அமைப்பை தயாரித்து திணிக்க வெளிக்கிட்டபோது நாங்கள் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பாரிய மக்களை திரட்டி எதிர்ப்பு போராட்டதை நடாத்தியதுடன் தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு கட்டமைப்பை உருவாக்கி மக்கள் அணிதிரண்டு அதை தோற்கடித்தோம்.

அதேபோன்று தமிழரகட்சியின் ஒரு பங்காளி முகவர்களாக செயற்பட்டுக் கொண்டிருக்க கூடிய புலம் பெயர்ந்த மக்களாலும் அங்கிருக்கும் ஏனைய அமைப்புக்களால் நிராகரிக்கப்படுகின்ற ஒரு சில உதிரிகளை வைத்து இயங்குகின்ற உலகத் தமிழர் பேரவை. இப்போது ஈழத்தமிழர்களை குறிவைக்கின்றது

எனவே தமிழ் தேசியத்தில் ஊறி இருக்க கூடிய தமிழ் தேசியத்துக்காக எத்தனையே தியாகங்களை செய்திருக்க கூடிய வடகிழக்கில் வாழுகின்ற ஈழதமிழர்கள் இதற்கு கடைசிவரைக்கும் இடம்கொடுக்க மாட்டார்கள். ஆனாலும் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை எடுப்பதற்கும் இப்படிப்பட்ட துரோக செயற்பாடுகளை செய்வதற்கும் ஆட்கள் இருக்கின்றனர் அவர்களையும் அவர்களுடன் பயணிக்கின்றவர்களையும் இனம்கண்டு ஒட்டு மொத்தமாக இந்த அரசியலில் இருந்து ஓரம்கட்டவேண்டு" என்றார்.

# பணத்தின் அவதாரம்

*பணத்தின் அவதாரம்*
*பணம், காசு, நாணயம், துட்டு*
*என்று சொல்லப்படும் உனக்கு*
*இத்தனை அவதாரமா?*
*வழிபாட்டுத் தலங்களிலும் சேவைசெய்யும் நிறுவனங்களிலும்*
*உன்பெயர் நன்கொடை*
*அரசாங்கத்தில், தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோர்க்கு*
*வழங்கப்படுவது சம்பளம் ஊதியம்*
*படிப்புக்காக பாடசாலைக்குக் கொடுக்கும்போது*
*பாடசாலைக் கட்டணம்*
*மணமகளுக்கு பெற்றோர் வழங்குவது*
*சீதனம், வரதட்சனை*
*விவாகரத்தின்போது வழங்கப்படுவது*
*சீவனாம்சம், தாபரிப்பு*
*அரசாங்கத்துக்குப் பொதுமக்கள் செலுத்துவது*
*வரி திறை*
*குற்றச் செயல்களின்போது செலுத்தப்படுவது*
*அபராதம்*
*ஓய்வுக்காலத்தில் அரசாங்கம் வழங்குவது*
*ஓய்வூதியம்*
*முதலாளி தொழிலாளிக்கு கொடுப்பது*
*கூலி*
*தொழில் புரிபவருக்கு சம்பளத்துக்கு அப்பால் கொடுப்பது*
*உதவிப்பணம்*
*தவறான வழியில் வாங்குவது கொடுப்பது*
*லஞ்சம், கையூட்டல்*
*வலுவிழந்தோர்க்கு அரசாங்கம் வழங்குவது*
*உதவித்தொகை*
*பண்டமாற்றின்போது கொடுக்கப்படுவது தரகு*
*வருடப்பிறப்பின்போது வழங்கப்படுவது கைவிசேடம்*
*குருமாருக்கு வழங்கப்படுவது தட்சினை*
*பெரியோர் அல்லது தெய்வத்துக்கு அளிப்பது காணிக்கை*
*சிறு சேவைக்கு வழங்கப்படுவது இனாம்*
*குடியிருக்கும் வீடு தொழில்செய்யும் இடத்துக்கு கொடுப்பது வாடகை*
*வீட்டில் முழுநேரம் வேலைபார்க்கும் மனைவிக்கு*
*கணவன் கொடுக்கவேண்டியது?*

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

# யார் குத்தியும் அரிசி ஆகட்டும்! அரிசியை யார் குத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல!

**- கனடா நக்கீரன்**

மாவீரர் நாளான நொவெம்பர் 27 அன்றும் அதற்குப் பின்னரும் நிலம், புலம் இரண்டிலும் வாழும் தமிழ் மக்களிடையே பேசு பொருளாகிவிட்ட விடயங்கள் இரண்டு. ஒன்று போலி துவாரகா பற்றிய சர்ச்சை. மற்றது உலகத் தமிழர் பேரவையின் இமயம-லைப் பிரகடனம். முன்னது வந்த வேகத்தில் மறக்கப்பட்டு விட்டது. பின்னது பற்றி இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் காரசாரமாக விமர்ச்சிக்கப்பட்டு வருகின்றது.
இந்த இமயமலைப் பிரகடனம் இரண்டு அமைப்புக்களால் வெளிடப்பட்டது. ஒன்று பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழர் பேரவை. மற்றது பவுத்த தேரர்களை உள்ளடக்கிய சிறந்த இலங்கைக்கான சங்கம் **('Sangha for a Better Sri Lanka').**

உலகத் தமிழர் பேரவை **(GTF)** புலம் பெயர் தமிழர்களர்கள் சிலரால் ஆயுதப் போர் மவுனிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது. உலகத் தமிழர் பேரவை பல்வேறு நாடுகளின் தமிழர் அமைப்புகளின் ஒரு கூட்டு அமைப்பாகும். ஈழத் தமிழர்களின் மனித உரிமைகளையும், தன்னாட்சியும், தாயகத்தையும் வலியுறுத்தும் அமைப்பாகும். இது மக்காளாட்சி, அறவழி, பன்னாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப செயல்ப்படுகிறது. இதன் முதல் தலைவர் வண. பிதா எஸ்.ஜே. இமானுவேல் அடிகள் ஆவர்.
1995 ஒக்தோபரில் குடாநாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்காக இலங்கை இராணுவம் தாக்குதலைத் தொடங்கியபோது யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேறிய 5 இலட்சம் மக்களில் இமானுவேல் அடிகளாரும் ஒருவர். அடுத்த ஆண்டை வன்னிக் காடுகளில் கழித்தார்.

1997 இல் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை காரணமாக, இம்மானுவேல் அடிகள் இங்கிலாந்து சென்று அங்கு ஓராண்டு காலம் பணியாற்றினார். பின்னர் செருமனியில், மூன்சுடர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் 2007 ஆம் ஆண்டு வரை குருவானவராகப் பணியாற்றினார். இங்கு பணியாற்றிக் கொண்டிருந்த போது அவர் இலங்கைத் தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும் பணிகளையும் பன்னாட்டு அரங்கில் முன்னெடுத்து வந்தார். 2010 ஆம் ஆண்டில் இம்மானுவேல் அடிகள் உலகத் தமிழர் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
இம்மானுவேல் அடிகளார் அவர் 2020 ஆம் ஆண்டு தாயகம் திரும்பியிருந்தார். அவரை அடுத்து சுரேன் சுரேந்திரன் அதன் தலைவராகவும் பேச்சாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இங்கிலாந்து நாட்டைப் புகலிடமாகக் கொண்டவர். 1983 ஆண்டு நடந்த இனக் கலவரத்தை அடுத்து அவரது குடும்பம் புலம் பெயர்ந்தது. இவ்வமைப்பு நான்கு மாநாடுகளை 2002 ஆண்டு தொடக்கம் தொடராக நடத்தியிருக்கின்றது.

உலகத் தமிழ் பேரவை தொடங்கிய காலம் தொட்டு அதில் கனடிய தமிழர் பேரவை **(CTC)** உறுப்புரிமை வகித்து வருகிறது. கனடிய தமிழர் பேரவை சார்பாக இராச்.தவரட்ணசிங்கம், அமெரிக்காவில் இருந்து மருத்துவர் இலயாஸ் ஜெயராசா மற்றும் இங்கிலாந்தில் இருந்து குகன் வேலுப்பிள்ளை ஆகி-யோரும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.
சிறந்த இலங்கைக்கான சங்கம் என்பது பல தசாப்தங்களாக அமைதி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்கள் அனைவரும் அச்சமும் ஐயமும் இல்லாமல், சம உரிமை-களை அனுபவிக்கும் ஒரு அமைதியான சுபீட்சமான இலங்கைக்காக அர்ப்பணித்த ஒரு மகா சங்கக் குழுவாகும்.

சிறந்த இலங்கைக்கான சங்கம் என்ற அமைப்பில் இலங்கையில் உள்ள மல்வத்தை, அஸ்கிரிய மற்றும் அமரபுர - இராமஞ்ஞ பவுத்த பீடங்களைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். தனித்தனியே இயங்கிய அமரபுர, இராமஞ்ஞன பீடங்கள் கடந்த ஓகஸ்ட் 16, 2019 இல் ஒன்றிணைந்தது தெரிந்ததே. இதன் காரணமாக இலங்கையில் உள்ள பவுத்த மத பீடங்களின் எண்ணிக்கை 4 இல் இருந்து 3 ஆகக் குறைந்துள்ளது. சிறந்த இலங்கைக்கான சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக வண. களுப்பகான பியரத்தின தேரர் இருக்கிறார்.
2023 ஏப்ரலில் நாகர்கோட் நேபாளத்தில் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த மகா சங்கத்தினருக்கும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழ் உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இமயமலைப் பிர-கடனம் தயாரிக்கப்பட்டது.

இலங்கையில் நிலவும் இனங்களுக்கு இடை-யிலான சிக்கல்கள் பற்றி இவை கலந்து பேசின. ”நன்கு கட்டமைக்கப்பட்ட இந்தத் தொடக்கப் பேச்சுவார்த்தைகள் ஒருவருக்கொருவர் கண்ணோட்டத்தைப் பார்க்க எங்களுக்கு உதவ-ியது” என இரண்டு அமைப்புக்களும் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ”பவுத்த தேரர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான எதிர்மறையான கருத்துக்கள் காணப்படுவதாகவும், பொருளாதார ரீதியாக வெற்றிகரமான மற்றும் செல்வாக்கு மிக்க புலம்பெயர் தமிழர்கள் இலங்கையை அழிக்க முனைவதாக சிங்கள சமூகத்தினரிடையே ஒரு கருத்து நிலவுவதாகவும், இந்த மாறுபட்ட கருத்துக்கள் மற்றும் அச்சங்கள் எப்போதும் பகுத்தறிவு அடிப்படையிலானவை அல்ல என்பதைக் காணலாம். நாகர்கோட்டில் வெளியிடப்பட்ட "இமயமலைப் பிரகடனம்" எங்கள் பயணத்தின் ஒரு முக்கியமான விளைவாகும்” என அந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இமயமலைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு உறுப்புரைகள் பின்வருமாறு -

உறுப்புரை 1
எந்தவொரு சமூகமும் தனது அடையாளத்தையும் இடத்தின் பெருமையையும் இழக்க நேரிடும் என்ற அச்சம் இல்லாமல் வாழவும் இலங்கையின் பன்முகத் தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

உறுப்புரை 2
பொருளாதார நெருக்கடியை சமாளித்தல், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக ஒரு பொருத்தமான மேம்பாட்டு மாதிரியைத் தெரிவு செய்தல், வெ-ளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் ஏனையவர்களிடம் இருந்து ஈடுபாடு மற்றும் முதலீட்டை எளிதாக்குதல், நாடு வளர்ச்சிப் பாதையில் இருப்பதை உறுதி செய்தல் மற்றும் இலங்கையை ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக ஆக்குதல்.

உறுப்புரை 3
தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் மற்றும் அனைத்து மக்களிடையே சமத்துவம் மற்றும் சம குடியுரிமையை ஊக்குவிக்கும், பொறுப்புக்கூறும் நிறுவனங்களை உறுதி செய்யும் மற்றும் மாகாணங்களுக்கு போதுமான அதிகாரப் பகிர்வை உத்தரவாதம் செய்யும் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் உள்ள அதிகாரப் பகிர்வு விதிகளை நம்பகமான முறையில் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

உறுப்புரை 4
ஒன்றுபட்ட, பிளவுபடாத நாட்டில் அதிகாரப் பகிர்வு, மக்களின் சமயம், பண்பாடு மற்றும் பிற அடையாளங்களை ஏற்றுக்கொண்டு, அந்த அடையாளங்களை மதித்து, அதை நோக்கிச் செயல்படுதல். இனக்குழுக்களுக்கும் மதக் குழுக்களுக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்துதல். (தொடர்ச்சி 25ம் பக்கம்)

# IN MEMORIAM

## *The Late Mr and Mrs. T. Paramanantharajah*



| **Thiyagarajah (Para) Paramanantharajah** | **Pooranam (Balesh) Paramanantharajah** |
|---|---|
| *Born to Serve: June 11, 1924* | *Born to Serve: March 29, 1932* |
| *Called to Eternity: Dec 13, 1984* | *Called to Eternity: Nov 22, 2001* |

**Appa and Amma** *every time you fed us - the first scoop that you served us was* **LOVE.**
*The second scoop was* **UNITY**. *The third scoop was* **STRENGTH** *and* **COURAGE.**
*Many parents do noble things, but both of you have surpassed them all.*

**Appa and Amma** *your affection was a driving force to accomplish and to overcome every hurdle. Whenever we press the replay button the little things that both of you did throughout our lives stands evergreen. When the calamities of the day-to-day routine had got us down, your touch was a cure that no doctor could prescribe.*

**Appa and Amma** *thank you for the sacrifices you have made for us.*
*Thank you for being one of the greatest parents.*

**We Love You Appa and Amma**

*Your Loving Children and Family*

**Siva Para Sivananthan - Nalayini Kumar - Esa Para Esananda - Ganesh Para Ganeshananda**

( 24ம் பக்கத் தொடர்ச்சி)

# யார் குத்தியும் அரிசி ஆகட்டும்! அரிசியை யார் குத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல!

உறுப்புரை 5
கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்வதற்கும், அத்தகைய துன்பங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக பொறுப்புக்கூறல் உள்ளிட்ட நடவடிக்கைகளை உருவாக்குவதற்கும் இணக்கமாகவும் அர்ப்பணிப்புடனும் இருக்கும் ஒரு இலங்கையை கட்டி எழுப்பல்.

உறுப்புரை 6
இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் மற்றும் பன்னாட்டு கடமைகளுக்கு இணங்குதல், சுதந்திரமான மற்றும் ஆற்றல்மிக்க வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். மற்றும் (இலங்கை) உலகின் மக்களாட்சி, அமைதியான மற்றும் வளமான நாடுகள் போல் அதன் பெருமையைப் பெறுவதை உறுதி செய்தல்.

இந்த இமயமலைப் பிரகடனத்தின் படிகளை சிறந்த இலங்கைக்கான சங்கம் என்ற அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தேரர்கள் குழுவும், உலகத் தமிழர் பேர-வையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுக்குழுவும் இலங்கையில் உள்ள சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் உட்பட பல அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் போன்றோரைச் சந்தித்துக் கையளித்து வருகின்றன.
இந்தக் குழு தேசிய ஒற்றுமையை நிறுவுவதன் மூலம் அமைதியான நாட்டை கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தடைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இமயமலைப் பிரகடனத்தை பெற்றுக் கொண்ட சபாநாயகர் மதிப்புக்குரிய மஹிந்த யாப்பா அபேவர்தன பேசுகையில், ஒவ்வொரு இலங்கையரும் திறந்த மனதுடன் இதில் இணைந்து இணக்கமான மற்றும் சுபீட்சமான இலங்கைக்கான கூட்டு பார்வைக்குப் பங்களிக்குமாறு அழைப்பு விடுத்தார். இந்தத் தேசியப் பணிக்காக தங்களை அர்ப்பணித்த அனைத்துத் தரப்பினருக்கும் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.
மகா சங்கம், உலகத் தமிழ் சமூகம் மற்றும் மதிப்புக்குரிய உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தச் சந்திப்புக்கள் ” தேசிய ஒற்றுமைக்கான ஒரு வரலாற்று வாய்ப்பு” என்று நீதி அமைச்சர் மதிப்புக்குரியு (கலாநிதி) விஜேதாச இராசபக்ச தெரிவித்தார். பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சமூகத்தை “புலம்பெயர்ந்தோர்“ என்று அழைப்பதற்கு பதிலாக, அவர்களை எங்கள் சொந்த சமூகமாக கருத வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். அவர்கள் அனைவரும் இந்த நாட்டில் வேர்களைக் கொண்டுள்ளனர், எனவே அவர்கள் இலங்கையர் என்று கருதப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
இலங்கையின் இனச் சிக்கலுக்கு நாடு சுதந்திரத்திரம் அடைந்த நாள் முதல் மேற்கொளளப்பட்ட முயற்சிகள் மகாசங்கத்தினரும் பவுத்த தேரர்களும் காட்டிய கடுமையான எதிர்ப்புக் காரணமாக சைவிடப்பட்டன. 1957 இல் எழுதப்பட்ட பண்டா - செல்வா உடன்பாடு, 1965 இல் எழுதப்பட்ட டட்லி - செல்வா உடன்பாடு இரண்டும் பவுத்த தேரர்கள் காட்டிய எதிர்ப்புக் காரணமாகவே கிழித்தெறியப்பட்டன என்பது வரலாறு.

எனவே சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என உலகத் தமிழர் பேரவை கருதுகிறது எனலாம். பவுத்த மத பீடங்களை எதிர்த்து அல்லது சிங்கள மக்களின் விரும்பத்திற்கு மாறாகத் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படுமாயின் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என்ற உண்மையை புறந்தள்ள முடியாது. எனவே சிங்கள மக்களிடையே செல்வாக்குச் செலுத்தும் பவுத்த தேரர்களது காலில் விழுந்தே இனச் சிக்கலுக்குத் தீர்வு காண்பது சிறந்த வழியாகும். இப்படியான முயற்சி முன்னர் மேற்கொள்ளப்படவில்லை. இதுவே முதல் முயற்சி. இந்த முயற்சி வெற்றியில் முடியாது தோல்வியில் முடியலாம். அதனால் இழப்பதற்கு ஒன்றும் இல்லை. இந்த வழியையும் தமிழர் தரப்பு மேற்கொண்டது என்று வரலாறு பேசும்.
எதிர்பார்த்தது போலவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இரு கன்னகைகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புக்கள் உலகத் தமிழர் பேரவையின் முயற்சியை கடுமையாகச் சாடி வருகின்றன.

தமிழர்களும் தாயகமும் எரிந்து கொண்டிருக்கையில் உலகத் தமிழர் பேரவை பிடிலை இசைக்கிறதா? என பிரித்தானிய தமிழர் பேரவை தனது அறிக்கையில் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளது. உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பைச் சேர்ந்த ஒரு சிலர் பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஶ' களை கொச்சைப்படுத்தும் முகமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - இவ்வாறு ரெலோவின் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.
”எல்லோரும் ஏறிச் சறுக்கி விழுந்த குதிரையில் சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதை” என இபிஆர்எல்எவ் பொதுச் செயலாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் உலகத் தமிழர் பேரவையின் முன்னெடுப்பை வர்ணித்துள்ளார்.
எப்போதும் என் வழி தனி வழி என நடந்து கொள்ளும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உலகத் தமிழர் பேரவையின் முயற்சி இரணில் அரசாங்கத்துக்கு வெள்ளையடிக்கும் முயற்சி எனச் சாடியுள்ளார். காங்கிரசைப் பொறுத்தளவில் அது இந்தியா, அமெரிக்கா, பிரித்தானிய நாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வருகிறது. இன்றைய பூகோள அரசியலில் இந்தியாவையும் மேற்குலக நாடுகளையும் பகைத்துக் கொள்வது எந்தளவு தூரம் புத்திசாலித்தனமான அரசியல் என்பது புரியவில்லை.

தாயகத்தில் நித்தம் பலத்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் வாழும் எமது மக்களுக்கு விடிவு வேண்டும். அரசியல் தீர்வு வேண்டும். நிலம் பறிபோகிறது, இந்துக் கோயில்கள் இடிக்கப்படுகின்றன, பவுத்த விகாரைகள் ஆயிரக் கணக்கில் வடக்கிலும் கிழக்கிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் முளைக்கின்றன, வடக்குக் கடல்வளம் சீனாவுக்குத் தாரை வார்க்கப்படுகிறது, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்குத் தீர்வு காண முயற்சிக்கக் கூடாதா? முயற்சி செய்வோரை இகழந்து பேசலாமா?
உலகத் தமிழர் பேரவையின் நோக்கங்கள் எவையும் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரானவை அல்ல. மாறாக, சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த அதே நோக்கங்கள் இவை.
உண்மையான அமைதி சமாதானம் நீதியில் நங்கூரமிடப்பட வேண்டும். அனைவருக்கும் உலகளாவிய உரிமைகளுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். இதைத்தான் உலகத் தமிழர் பேரவை அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக சாதிக்க முயற்சிக்கிறது. இந்த முயற்சிகளை நாம் ஊக்குவிக்க வேண்டுமே தவிர, தடைக் கற்களைப் போடக் கூடாது.
யார் குத்தியும் அரிசி ஆகட்டும்! அரிசியை யார் குத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல!



OM NAMO NARAYANA


125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்
N. P. ராஜசேகர்
Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278
அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.



# ஊர்காவற்றுறையில் ஆலயத்தில் இருந்த நகைகள் மற்றும் பொற்காசுகளை திருடிய பூசகர் கைது!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

ஆலய விக்கிரகங்களின் கீழ் உள்ள நகைகள் மற்றும் பொற்காசு என்பவற்றை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீவகம், ஊர்காவற்றுறையில் உள்ள இரண்டு ஆலய விக்கிரகங்களை மேலெழுப்பி அவற்றின் கீழ் இருந்த மோதிரம் மற்றும் பொற்காசு என்பற்றை அவர் திருடியுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

கொக்குவிலைச் சேர்ந்த 27 வயதுடைய பூசகரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பூசாரி போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து 5 பவுண் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸ் பரிசோதகர் தெ.மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப்பின் குழுவே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# இந்தியாவில் பரதநாட்டியத்திற்கு பட்டப்படிப்பு வருவதற்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பெற்றது – சிங்கப்பூர் கலை நிறுவன இயக்குநர் பெருமிதம்!



இந்தியாவில் கூட பரதநாட்டியத்துக்கு அண்மையில் தான் பட்டப்படிப்பு கிடைத்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள இராமநாதன் நுண்கலை பீடத்தில் பரதநாட்டியத்திற்கும் கர்நாடகா சங்கீதத்துக்கும் பட்டப்படிப்பு இருப்பதையிட்டு நான் பெருமை அடைகிறேன் என சிங்கப்பூர் அப்சரா கலை மன்ற இயக்குனர் அரவிந்த் குமாரசாமி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்திய கலாச்சார நிலையத்தில் அரங்கேற்றப்பட்ட அமரா நாட்டிய நடனம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவிலுள்ள பிரபல நடனப் பள்ளியான கலாச்சேத்திராவில் கூட நடனத்துக்கான பட்டதாரி சான்றிதழ் கிடையாது டிப்ளோமோ சான்றிதழ் தான் வழங்கப்படுகிறது.

இந்தியாவில் பிரபல கலைஞர்களான மகாராஜாபுரம் விஸ்வநாதர் தஞ்சை நால்வரின் பேரன் ஆகியோர் இலங்கையில் தமது ஆசிரியர் பயிற்சிக்கான கல்வியை மேற்கொண்டனர்.

நாம் அவதானித்ததில் யாழ்ப்பாணத்தில் கலைத்துறை சார்ந்த பக்குவத்தன்மை பொருந்திய ஆசிரியர்கள் பலர் இருக்கின்றனர் அவர்களுக்கு ஆற்றுகை செய்வதற்குரிய களத்தை அமைத்துக் கொடுத்தால் கலைத்துறையில் மாணவர்கள் பிரகாசிப்பார்கள்.

ஆகவே சிங்கப்பூரில் உள்ள எமது அப்சரா கலைக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் உள்ள நடன கலை மாணவர்களுக்கு எமது நாட்டில் கலை அனுபவத்தை வளர்ப்பதற்கு தயாராக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்மாதிரியான பெண்தலைமைத்துவத்திற்கான விருது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி அவர்களுக்கு






முன்மாதிரியான பெண்தலைமைத்துவத்திற்கான விருது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைத்துள்ளது.

Women Icon Times Women மற்றும் World Women Council உடன் இணைந்து வழங்கிய "முன்மாதிரியான பெண்தலைமைத்துவத்திற்கான விருதை" கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாக கொண்டு இயங்கிவரும் Women Icon அமைப்பானது, தங்களின் சொந்த வாழ்க்கையில் சாதித்த பெண்களின் திறமையை சிறப்பிக்கும் வகையில் விருதினை வழங்கி கொண்டாடுகின்றது.

ஒருவரின் திறமை மற்றும் செயல்திறனுக்காக அவரை பாராட்டுவதனூடாக அடுத்த கட்டத்திற்கு முன்னேற அவர்களை ஊக்குவிக்கின்றது.

எதிர்கால சந்ததியினருக்கு ஊக்கமளிக்கும் நுழைவாயிலாக இருக்கும் சாதனையாளர்கள் கொண்டாடப்பட்டு கௌரவிக்கப்பட வேண்டும். மனவுறுதிக்கும், உழைப்புக்கும் முன்னுதாரணமான பெண்கள் கௌரவப்படுத்தப்படல் வேண்டும்.

ஒரு பெண்ணின் சாதனைகளைப் புகழ்ந்து, அவர்கள் விரும்பும் துறையில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாகவே விருதுகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

# யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு – கிராம மட்ட கலந்துரையாடல்கள் ஊடாக பொதுமக்களை தெளிவுபடுத்துமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அறிவிப்பு

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக, மாகாணத்தின் டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது. யாழ் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 2192 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் இன்று (14.12.2023) நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கணேகேஸ்வரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், மாவட்ட அரசாங்க அதிபர்கள், சுகாதார பணிமனைகளின் அதிகாரிகள் உள்ளிட்டோர் நேரடியாகவும், சூம் ஊடாகவும் கலந்துக்கொண்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மிகக் குறைவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், எனினும் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் காணப்படுவதாகவும் அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும், சுகாதார துறைசார் அதிகாரிகளும் சூம் ஊடாக தெரிவித்தனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பிலும், டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதில் சுகாதார துறையினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் அதிகாரிகளால் கௌரவ ஆளுநருக்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

அதற்கமைய, டெங்கு நுளம்பு பரவுவதை தடுக்கவும், பொதுமக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கிராமிய மட்டத்தில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு கௌரவ ஆளுநர் ஆலோசனை வழங்கினார். வடிகான் துப்பரவு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், கைவிடப்பட்ட மற்றும் பராமரிப்பற்ற காணிகளில் நுளம்பு பெருகுவதை தடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். பராமரிப்பற்ற காணிகள் தொடர்பில், காணி உரிமையாளர்களுக்கு







எதிராக விரைவான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளுக்காக பொலிஸ், முப்படைகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளுமாறும் கௌரவ ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் பிளாஸ்டிக் பொருள்களை மாணவர்கள் வகுப்புகளுக்கு கொண்டு செல்வதை தடுக்க வேண்டும் எனவும், தினமும் காலை கூட்டத்தின் போது டெங்கு ஒழிப்பு தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும் எனவும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பணிப்புரை விடுத்தார். அத்துடன், மாகாணத்திலுள்ள அனைத்து அரச திணைக்களங்களிலும் வாராந்தம் துப்பரவு பணிகளை மேற்கொள்ள திணைக்கள தலைவர்கள் அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பூரண ஒத்துழைப்பை வழங்க தயார் என இதன்போது சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார். பொலிஸ் நிலையங்களில் காணப்படும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளில் அறிவித்தல்களை வழங்க முடியும் எனவும் அவர் கூறினார். மேலும், சுற்றுசூழல் பாதுகாப்புக்கான பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் கிராமிய மட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியும் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

அதற்கமைய, வாராந்த கிராமிய மட்ட கலந்துரையாடல்கள் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும், டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைகளை அரச வைத்தியசாலைகளில் மேம்படுத்துமாறும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் வடக்கு மாகாணத்திற்குள் காணப்படும் தனியார் வைத்தியசாலைகளில் கடமைபுரியும் அரச வைத்தியர்களும், டெங்கு காய்ச்சல் தொடர்பில் சமூக அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும், உரிய வைத்தியர்களுக்கு இது தொடர்பில் ஆலோசனை வழங்குமாறும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளருக்கு, கௌரவ ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

# "நிரந்தர நிவாரணமாக ரூ.12,659 கோடி தேவை" : தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை

புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்திட தற்காலிக நிவாரணத் தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் வழங்கிட தமிழ்நாடு முதல்அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், "தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க ஸ்டாலின் இன்று (14.12 2023) தலைமைச் செயலகத்தில் மிக்ஜம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஒன்றிய குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

மிக்ஜம் புயலால் ஏற்பட்ட கடுமையான மழைப்பொழிவின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி. திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பிற்குள்ளானது. மேலும் வரலாறு காணாத கனமழையின் காரணமாக, சாலை, பாலம், நீர்நிலை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கும் பெரிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்அமைச்சரது உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் காரணமாக, பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் மிக விரைவாக இயல்பு நிலை திரும்பியது. தமிழ்நாடு முதல்அமைச்சர் 5122023 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், மிக்ஜம் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும். வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும், தமிழ்நாட்டிற்கு உடனடியாக ரூ.5,060 கோடி நிதியை விடுவிக்குமாறும் கோரியிருந்தார்.

அதைத் தொடர்ந்து, மத்திய பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ்நாத் சிங் 7.12.2023 அன்று சென்னை வருகை தந்து, 'மிக்ஜம்' புயல் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், தமிழ்நாடு முதல்அமைச்சருடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார். முதல் அமைச்சர், மிக்ஜம் புயலின் காரணமாக ஏற்பட்ட



பாதிப்புகளைத் தெரிவித்து இடைக்கால நிதி உதவி கோரும் கோரிக்கை மனுவினை அளித்து, தமிழ்நாட்டிற்கு உடனடியாக நிதியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட வந்த மத்திய அரசின் பல்துறை ஆய்வுக் குழு 12.12.2023 மற்றும் 13.12,2023 ஆகிய நாட்களில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டது.

இன்று (14.12.2023) தமிழ்நாடு முதல் அமைச்சரை மத்திய அரசின் பல்துறை ஆய்வுக் குழுவினர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர். அவ்வமயம், மிக்ஜம் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரும் கோரிக்கை மனுவினை (Memorandum) தமிழ்நாடு முதல்அமைச்சர் மத்திய அரசின் ஆய்வுக் குழுவின் தலைவரிடம் வழங்கினார்.

இக்கோரிக்கை மனுவில், புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீர்செய்திடவும், மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், பழுதடைந்த துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட மின்சார உட்கட்டமைப்புகளை சீர் செய்திடவும், பாதிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் தொட்டிகள், தெருவிளக்குகள், கிராம சாலைகள் ஆகியவற்றை சீர் செய்திடவும் இழப்பீடுகள் கோரப்பட்டுள்ளது.

மேலும், மிக்ஜம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கு இழப்பீடுகள் வழங்கவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடுசெய்திடவும், சாலையோர வியாபாரிகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடவும், தற்காலிக நிவாரணத் தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதல்அமைச்சர் பேசியதாவது, மிக்ஜம் புயலால் ஏற்பட்ட வெள்ள சேதங்களைப் பார்வையிட்டு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் கடந்த இரண்டு நாட்கள் நீங்கள் மேற்கொண்ட ஆய்வு பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த வெள்ளச் சேதத்தை பொறுத்தவரை தமிழ்நாடு அரசு தேவையான எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. அதேபோல் புயல், மழையின் தாக்கத்திற்கு பிறகு, மீட்பு நிவாரண நடவடிக்கைகளும் முழுவீச்சில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. நேற்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இதனை குறிப்பிட்டு நீங்கள் தமிழக அரசிற்கு பாராட்டுக்களை தெரிவித்திருந்தீர்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத இந்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட மிகப் பெரிய சேதங்களை சரிசெய்து மீண்டும் உருவாக்கிடவும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அதனை மீண்டும் உருவாக்கி வழங்கிடவும் தமிழ்நாடு அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் போதுமானது அல்ல. மத்திய அரசின் பங்களிப்பும் இதற்கு பெருமளவு தேவைப்படுகிறது. எனவே. மிக்ஜம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை மீட்க தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் மத்திய அரசிற்கு நீங்கள் உரிய பரிந்துரை செய்து, தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரணத் தொகையை பெற்றுத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்அமைச்சர் மத்திய குழுவினரை கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்." என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'மிக்ஜம்' புயல் மழை பாதிப்பு: ரூ.6 ஆயிரம் நிவாரணத் தொகை டோக்கன் வழங்கும் பணி தொடக்கம்




வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் வசிக்கும் மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார். வடகிழக்கு பருவமழை காலத்தையொட்டி வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை, புயலாக மாறியதால் கடந்த 3 மற்றும் 4ந் தேதிகளில் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மிகக் கனமழை பெய்தது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது.

சென்னையில் ஏரிகள், நீர்நிலைப் பகுதிகள், தாழ்வு நிலைப் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டு இருந்த கட்டிடங்கள், வீடுகள் நீரில் மூழ்கின. கார் உள்ளிட்ட வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை அரசு வழங்கி வருகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் வசிக்கும் மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரணம் ரொக்கமாக வழங்கப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார்.

அவரது அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் ராஜாராமன் அரசாணை பிறப்பித்திருந்தார். இதற்கான டோக்கன் வருகிற 16ந் தேதி முதல் வினியோகிக்கப்படும் என கூறப்பட்டிருந்த நிலையில், இன்று பிற்பகல் முதல் டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் அனைத்து வட்டங்களுக்கும்; செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும், திருப்போரூர் வட்டத்தில் 3 வருவாய் கிராமங்களுக்கும்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்களுக்கும்;

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி, பூந்தமல்லி, ஊத்துக்கோட்டை திருவள்ளூர் ஆகிய ஆறு வட்டங்களுக்கும் நிவாரண தொகைக்கான டோக்கன் வழங்கும் பணி தொடங்கி உள்ளது. டோக்கன் பெற்றவர்களுக்கு வருகிற 17 ந்தேதி முதல் (ஞாயிற்றுக்கிழமை) ரேஷன் கடைகளில் ரூ.6 ஆயிரம் நிவாரணத் தொகை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் வழங்கும் பணியை சென்னையில் வரும் 17ந்தேதி தொடங்கி வைக்கிறார்.

# இந்தி கற்க வேண்டும் என விமான பயணிகளை கட்டாயப்படுத்துவதா? - டாக்டர் ராமதாஸ் கண்டனம்

கோவா விமான நிலையத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பெண் பொறியாளரிடம் அத்துமீறிய பாதுகாப்புப் படை வீரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார். பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னைக்கு பயணிப்பதற்காக கோவா விமான நிலையத்திற்கு வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் பொறியாளரிடம் இந்தி தெரியுமா? என்று கேட்டு அத்துமீறலில் ஈடுபட்டிருக்கிறார் மத்திய தொழில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர்.

"நான் தமிழ்நாட்டுப் பெண். எனக்கு இந்தி தெரியாது" என்று பெண் பொறியாளர் கூறியதை மதிக்காத மத்தியப் படை வீரர், "தமிழ்நாடு இந்தியாவில் தானே இருக்கிறது. இந்தி தேசிய மொழி. வேண்டுமானால் கூகுள் செய்து பாருங்கள். இந்தியாவில் உள்ள அனைவரும் இந்தி கற்க வேண்டும்" என்று உரத்தக் குரலில் கூறி தமிழ் பொறியாளரை அவமதித்திருக்கிறார். மத்திய பாதுகாப்புப் படை வீரரின் செயல் கண்டிக்கத்தக்கது.

விமான நிலையங்களில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ள மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரில் பலர், தங்களின் பணி என்ன? என்பதை மறந்து விட்டு, இந்தி தேசிய மொழி, அதைக் கற்றுக்கொள்ளுங்கள் என்று பயணிகளை அறிவுறுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தி மொழி இந்தியாவின் அலுவல் மொழி மட்டுமே, தேசிய மொழி அல்ல என்ற அடிப்படைக் கூட தெரியாத அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளிடமும், பொறியாளர்கள், மருத்துவர்கள் போன்றவர்களிடமும் இதுகுறித்து அறிவுரை கூற என்ன தகுதி இருக்கிறது?

கோவா விமான நிலையத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பெண் பொறியாளரிடம் அத்துமீறிய பாதுகாப்புப் படை வீரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டு விமான நிலையங்களில் தமிழ் தெரிந்த மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரை மட்டுமே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.


# இவ்வார ராசிபலன்

## 15-12-2023 வெள்ளி தொடக்கம் 21-12-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். புண்ணியம் சேரும். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். மனஅமைதி குறையும். திருமண வாய்ப்புக் கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். தாய் வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். கடுமையான காலம். சிரமங்கள் அதிகரிக்கும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். விரக்திகள் மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். வழக்குகள் வெற்றி தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 3,5,7,1*
*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,S*





**ரிஷபம்:** திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும் வாரம். விரக்திகள் மறையும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தேக ஆரோக்கியம் கூடும். நிதி நிலைமை சீராகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். அந்தஸ்து உயரும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக் கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். காரியத்தடை ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. துணிவோடு செயல்படுவீர்கள். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். உள்ளம் மகிழும். வறுமைகள் ஒழியும். தனலாபம் கூடும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். நண்பர்களால் உதவி உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளி துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,2*
*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J*




**மிதுனம்:** தொட்டது துலங்கும் வாரம். ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். வெளியூர் பயணம் உண்டு. புதிய தொழில் அமையும். தொழில் வளம் கூடும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் உற்சாகம் கூடும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். வியாபாரம் லாபம் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. புதிய நட்பு உருவாகும். வாகனச் செலவு ஏற்படும். அனுகூலமான காலம். நன்மைகள் நாடி வரும். வராதக் கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் லாபம் தரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீனிவாசப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,4,9,7*
*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,T*




**கடகம்:** தடங்கல் இல்லாத தன வரவு வரும் வாரம். யோகமான காலம். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும் கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. கமிஷன் தொழில் லாபம் உண்டு. ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். திட்டம் வெற்றி பெறும். பட்டம் பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத காலம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளால் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய தகுதிகள் மேம்படும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பொருளாதாரம் உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஆடை, அணிகலன்கள் சேரும். புது முயற்சிகள் பலன் தரும். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,J*



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான காலம். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத் துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய் வழி உறவால் கவனம் தேவை. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உடல் பொலிவு கூடும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். விறுவிறுப்பான காலம். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். புதிய கடன் உருவாகும். தொழில் போட்டிகள் அதிகமாகும். மருத்துவச் செலவு குறையும். பயணம் அனுகூலம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Y*




**கன்னி:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். மன உறுதி அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை அகலும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். விரக்திகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கலனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். குடும்பத்தில் மேன்மை உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். சாதனைகள் ஏற்படும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பணியில் பாராட்டு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். விரும்பியது நிறைவேறும். திருப்பங்கள் நிறைந்த காலம். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புக்கள் அகலும். வேற்றுமைகள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். பாக்கிகள் வசூலாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,5,3,1*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V*




**துலாம்:** வில்லங்கம் விலகும் வாரம். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, வாங்கும் யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பழையக் கடன் தீரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். அற்புதங்கள் நிகழும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். பயணம் பலன் தரும். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். மனைவியின் கோபம் கூடும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். மனம் மகிழும். சீரான வாழ்வமையும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். மன சந்தோ'ம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தி தாய், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1*
*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J*




**விருச்சிகம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. திடீர் செலவு ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். கடன் சுமை குறையும். உடல்வலி தோன்றி மறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. உண்மைகள் வெளிப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தனவரவு உண்டு. குதூகல எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீக சொத்துக் கிடைக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். கடன் அதிகமாகும். பேச்சில் பணிவு தேவை. பெற்றோர் ஆலோசனை பலன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவுகள் தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். உறவினர் வருகை உண்டு. நட்பால் பிரிவு ஏற்படும். பால் தானம் செய்வதால் பாவங்கள் விலகும். வரவுகள் அதிகரிக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். வஸ்திர தானம் வளம் பெருகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7*
*அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K*

**(தொடர்ச்சி 29 பக்கம்)**


# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)





**தனுசு:** சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும் வாரம். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பெருமைகள் கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். மனஅமைதி சீர்குலையும். வாகன மாற்றம் உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்ட காலங்கள் மறையும். பணிவும், துணிவும் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். உற்சாகம் களை கட்டும். பொதுவாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிக்கொள்ளும். ஆடை, அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். வங்கி சேமிப்பு உயரும். முற்போக்குச் சிந்தனைகள் உருவாகும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். மங்கல செய்தியால் மனம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டு. பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,G




**மகரம்:** தேக ஆரோக்கியம் மிளிரும் வாரம். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். படிப்பில் கவனம் வேண்டும். திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து நீங்கும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புகள் கூடும். வியாபாரம் செழிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் குறையும். விவாக முயற்சி வெற்றி தரும். முத்தான வாய்ப்புகள் பெருகும். ஸ்திர சொத்து சேரும். கனவுகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கல்வி ஈடுபாடு கூடும். கணவனின் அன்பு அதிகரிக்கும். வேண்டாத நபர் விலகுவர். வேலை வாய்ப்பு கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். இஷ்ட தெய்வத்தால் கஷ்டங்கள் விலகும். வருமானம் வரும். பூமியால் லாபம் உண்டு. பாதகம் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




**கும்பம்:** வாயில் தேடி வரன் வரும் வாரம். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய் வழி உறவால் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். சாதுர்யமான காலம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். பொருளாதார வளம் மேம்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகனச் செலவுகள் ஏற்படும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து சீராகும். பங்குச்சந்தையில் இலாபம் பெருகும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தடைகள் விலகும். வீண் செலவுகள் அதிகரிக்கும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் தரும். பெற்றோர் நலம் கவனம் தேவை. புதிய பொறுப்பு வரும். செலவு அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,6,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**மீனம்:** வெளியூர் பயணம் வெற்றி தரும் வாரம். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரித் தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேர்க்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கலை ஆர்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். சிறப்புக்கள் சேரும். போட்டி, பொறாமைகள் விலகும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. தொல்லைகள் அகலும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். ஆடம்பர சுகங்கள் கூடும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். போதிய வரவு தரும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. தொட்டது துலங்கும். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். இனிப்பானச் செய்தியால் மனம் மகிழும். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் நீங்கும். எண்ணங்கள் மாற்றம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். மருத்துவச் செலவு கூடும். காரிய அனுகூலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,K

# கனடாவிலிருந்து குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் சென்ற நடிகை ரம்பா!



யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள, தென்னிந்திய பிரபல பாடகர் ஹரிஹரன் அவர்கள் உள்ளிட்ட குழுவினரின் இசை நிகழ்ச்சியை தொகுத்து வங்குவதற்காக தற்போது தனது குடும்பத்துடன் கனடாவில் வாழும் முன்னாள் பிரபல நடிகை ரம்பா அவர்கள் இலங்கைக்கு சென்றுள்ளார் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த ரம்பா அவர்கள் புதன்கிழமை 13ம் திகதி யாழ்ப்பாணம் - மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு தரிசனத்திற்காகச் சென்றுள்ளார். மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானத்தின் விசேட கிரகப்பிரவேசம் நிகழ்வில் பங்கெடுப்பதற்கே அன்றையதினம் இவ்வாறு ஆலயத்திற்கு வருகை தந்துள்ளார். அவருடன் அவரது மூன்று பிள்ளைகள் மற்றும் கணவர் ஆகியோர் சென்றிருந்தனர்.



நடிகை ரம்பா அவர்கள் யாழ்ப்பாணம் - சுதுமலையை பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது கனடா வாழ் தொழிலதிபர் ஒருவரையே திருமணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்! பிரான்ஸில் திருவள்ளுவர் திருவுருவச்சிலையை திறந்து வைத்தார்



பிரான்ஸ் நாட்டின் வொரெயால் நகர தமிழ் கலாச்சார மன்றத்தின் ஏற்பாட்டில் பிரான்ஸில் செர்ஜி நகரில் இடம்பெற்ற திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துக் கொண்டு திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் செர்ஜி நகர மேயர் ஜியோன் பவுல் ஜீன்ஸ்டன், இந்தியாவின் பாண்டிச்சேரி



மாநிலத்தின் அமைச்சர் லக்ஷ்மி நாராயணன், பிரான்ஸிற்கான இந்திய தூதுவர் ஜவீட் அஷ்ரப், தஞ்சாவூர் தமிழ் பல்கலைகழக தலைவர் அயலக கல்வி டாக்டர் குறிஞ்சி வேந்தன், பிரான்ஸ் நாட்டின் அரசியல், கலாச்சார, இலக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்வேறுபட்ட நாடுகளை சேர்ந்த அரசியல், கலாச்சார, இலக்கிய பிரதிநிதிகள் கலந்துக்கொண்டனர்.

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1078



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஆரையம்பதி பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*" கரந்தைபுனை கண்ணுதலுங் கண்ணன் றானும்*
*களிப்புடனே கலந்துதவு காரி தன்மேல்*
*உரந்தரு பொன்னூஞ்சலிசை ஓதுதற்கு*
*உம்பல்முகத் துடனுதித்தெய் வுலகு முய்யப்*
*புரந்தரன்பூ சனையியற்றப் பொன்னி யாற்றைப்*
*பூங்காவில் வரச் செய்த புனிதன் றன்னை*
*நிரந்தரமா யுயிர்தோறும்தம் நிறைந்து நிற்கும்*
*நின்மலனாய் ஐங்கரன்றாள் நினைகுவாமே."*

ஐயனாரின் தோற்றம்பற்றிய புராணக்கதையும் காணப்படுகின்றது. ஐயனாரின் தோற்றம் சாதாரண நிலையிலுள்ள மக்களிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பினாலும், கால, தேச, வர்த்தமானங்களுக்கமையவும், வாழ்வியலை பல்வேறு நிலைகளில் மக்கள் வாழ்ந்தமையைப் புலப்படுத்தவும், சிவ, வைணவ ஐக்கியத்தை ஏற்படுத்தவும் நிகழந்ததாகக் கொள்ள முடியும்.

அநீதிகள் பல புரிந்த மகிஷாசுரனை துர்க்கை கொன்றபோது, அவனது தங்கையாகிய மகிஷி கோபமுற்று, தேவர்களைப் பழிக்குப்பழி வாங்கப் பிரம்மதேவனை நோக்கித் தவம் இயற்றிப் பல வரங்களைப் பெற்றாள். அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என வரம் பெற்ற மகிஷி, தேவர்களையும், மற்றவர்களையும் கொடுமைப்படுத்தி வந்தாள். அவளிடமிருந்து தப்பித்து நெடுநாள் வாழ எண்ணிய தேவர்கள், பாற்கடலைக் கடைந்து அமுது எடுக்க விரும்பினர். ஆனால் அசுரர்கள் தாம் நீண்டநாள் வாழவிரும்பி தேவர்களிடமிருந்து அமுதைப் பறித்து உண்ணத் தொடங்கினர்.

இவ்வேளையில் தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற திருமால், மோகினி வடிவங்கொண்டு அசுரர்களை மயக்கி, அமுதத்தினைப் பெற்றுத் தேவர்களுக்கு வழங்கினார். மோகினி அவதாரங்கொண்ட திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்த குழந்தைக்கு, தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனான ஐயனாரின் அவதாரமாக விளங்குகின்றன.

இந்தியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து கதிர்காம யாத்திரை செல்பவர்கள், மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி ஊடாகச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளனர். ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியிலே, கதிர்காமம் செல்வதென்பது மிகவும் கடினமான விடயமாகக் காணப்பட்டுள்ளது. சீரற்ற பாதைகள், காட்டுவழியால் பிரயாணம், வனவிலங்குகளால் ஆபத்து, காட்டுப்பாதையால் செல்லும்போது அப்பகுதி அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயம், எனப் பலவற்றைத் தாண்டியே கதிர்காமத்தை அடைய வேண்டியிருந்தது.

இவ்வாறு செல்வோர் யாவரும் கதிர்காமத்தைச் சென்றடைவதில்லை. பலர் வழியிலுள்ள கிராமங்களிலே தங்கிப் பின்னர், அவற்றையே தமது சொந்த இடமாகக் கொள்வதும் உண்டு. கதிர்காமம் செல்லப் புறப்பட்டுச் சென்ற பலர் இவ்வாறு ஆரையம்பதியிலே தங்கி, அதனையே தமது ஊராகக் கருதி வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம யாத்திரை புறப்பட்ட ஒருவரே, இவ்வாறு தங்கி, ஆரையம்பதியில் ஐயனார் வழிபாட்டை அறிமுகம் செய்தார் என்பது ஐதீகமாகக் காணப்படுகின்றது. பரமநயினார் என்னும் பெயருள்ள ஐயனார் கோயில்கள் காலப்போக்கில் செங்கலடி, தாழங்குடா என்னும் ஊர்களிலும் உருவாக்கப்பட்டன.

ஐயனார் வழிபாடு ஈழத்திலே அருகியே காணப்படுகின்றது. ஆயினும் சப்த தீவுகளுள் ஒன்றாகிய அனலைதீவிலே, மிகப்பெரிய தேரைக் கொண்ட ஐயனார் கோவில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகவும் காணப்படுகின்றது. ஈழத்திலே ஐயனாரை வழிபட்ட மக்கள், புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஐயனாரின் அவதாரமான ஐயப்பன் வழிபாட்டைத் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதன் பிரதிபலிப்பாக ஒவ்வொரு ஆண்டும் ஐயப்பபக்தர்கள் சபரிமலை சென்று தமது வேண்டுதலை நிறைவேற்றி வருகின்றனர்.

ஆரையம்பதியிலே அமைக்கப்பெற்ற ஐயனார் கோயில், பறங்கியர் காலத்தில் மறைந்துவிட்டது. பின்னர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே குறிப்பிட்ட இடத்தில், ஐயனார்வழிபாடு மீண்டும் ஆரம்பமாகியது. இக்காலப்பகுதியில் பந்தலொன்றினை அமைத்து, ஆண்டுதோறும் வழிபாடு நிகழ்த்தி வந்துள்ளார்கள். பின்னர் 1930 ஆம் ஆண்டளவில் ஆலயமொன்றினைக் கல்லினால் மடாலயமாகக் கட்டி வழிபாடு செய்து வந்துள்ளனர். இம்மடாலயம் இரு மண்டபங்களைக் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. இம் மண்டபங்களில் ஒன்று கருவறையாகப் பயன்படுத்தப்பட்டது. இங்கு அமைக்கப்பட்ட பீடமொன்றில் சூலம் அமைந்திருந்தது. நாள்தோறும் பிற்பகலில் ஊரவர் பரமநயினாருக்கு அவல், கடலை, ரொட்டி முதலியவற்றைப் படைத்து வழிபடுவது வழக்கமாகும். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வழிபாடுகளும், பஜனைகளும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

1955 ஆம் ஆண்டு மடாலயமாக இருந்த பரமநயினார் ஆலயம் இடிக்கப்பட்டு, நித்திய, நைமித்திய கருமங்கள் செய்யத்தக்க முறையில், மக்கள் கொடுத்த நிதியின் உதவியுடன் ஆலயமொன்று அமைக்கப்பட்டது. கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தம்ப மண்டபம் ஆகிய அம்சங்களைக் கொண்டதாகப் பரமநயினார் கோயில் கட்டி முடிக்கப்பட்டது. 20 அடி உயரம் கொண்டதாகக் கர்ப்பக்கிருகம் அமைக்கப்பட்டது. இது சதுர வடிவில் ஒற்றைத் தளமாக அமைந்த, சிறிய விமானத்தைக் கொண்டுள்ளது. அதன் கிழக்குப் புறத்திலே வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானும், தெற்கிலே யோக தட்சிணாமூர்த்தியின் வடிவமும், அமைந்துள்ளன. மேற்கிலே கருடாரூட மூர்த்தியான மகாவிஷ்ணுவும், வடக்கிலே சிவபெருமானும், விநாயகரும் எழுந்தருளியள்ளனர். நாகதம்பிரான், வைரவர், சண்டேசுவரர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவார தேவர்களுக்கும், இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர், வள்ளி தெய்வயானை சமேதரரான சுப்ரமணியர், சந்திரசேகரர், கண்ணகி ஆகியோரின் பஞ்சலோகத்தினாலான எழுந்தருளி விக்கிரகங்களும் இவ்வாலயத்திலே காணப்படுகின்றன.

**- வளரும்**

## இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றில் முதன்முறையாக குறுந்தகவல் மூலமாக ஆலய விடயங்களை அறிந்துகொள்ளக் கூடிய சேவை!



இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றில் முதன்முறையாக குறுந்தகவல் மூலமாக ஆலய விடயங்களை அறிந்துகொள்ளக் கூடிய சேவை முறையானது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் 06-12-2023 புதன்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு திருமுருகன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இச் சேவையின் மூலம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் ஆற்றப்பட்டு வரும் பல்வேறு சமூக நலத்திட்ட பணிகள், ஆலய விசேட உற்சவங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய முழுமையான விபரங்களை எவ்வித கட்டண அறவீடுமின்றி இலவசமாக அறிந்து கொள்ள முடியும்.

குறித்த சேவையினை பெற்றுக் கொள்வதற்கு கீழ்வரும் முறை மூலம் இணைந்துகொள்ள முடியும்.

https://www.tellidurga.org என்ற தேவஸ்தானத்தின் இணையத்தள முகவரிக்கு சென்று தங்களுடைய தொலைபேசி இலக்கங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

(தொலைபேசி இலக்கங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் OTP முறை (One-Time Passwords Authenticate System) பயன்படுத்தப்பட்டுள்ளது)

## அன்பின் தொனி - 716

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை -** Grace of God

**கர்த்தரின் ஆளுகை**

ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீரூற்றைப்போல இருக்கிறத் அதைத் தமது சித்தத்தின் படி அவர் திருப்புகிறார். மனிதனுடைய வழியெல்லாம் அவனுடைய பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும் கர்த்தரோ இருதயங்களை நிறுத்திப்பார்க்கிறார். பலியிடுவதைவிட, நீதியும் நியாய மும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம். மேட்டிமையான பார்வையும், அகந்தையான மனமுமுள்ள துன்மார்க்கர்கள் போடும் வெளிச்சம் பாவமே. ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத் திற்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்திற்கும் ஏதுவாகும். பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போல இருக்கும். துன்மார்க்கர்கள் நியாயம்செய்ய மனமில்லாமல் இருக்கிறபடியால், அவர்கள் அழிக்கப்பட்டுபோவார்கள். குற்றமுள்ளவன் தன்னுடைய வழிகளில் மாறுபாடுள்ளவன் சுத்தமுள்ளவனோ தன்னுடைய செயலில் செம் மையானவன். சண்டைக்காரியோடு ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைவிட, வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம். துன்மார்க்கனுடைய மனம் தீங்கைச் செய்ய விரும்பும் அவனுடைய கண்களில் அவனுடைய அயலானுக்கு இரக்கம் கிடையாது. பரியாசக்கார னைத் தண்டிக்கும்போது பேதை ஞானமடைவான் ஞானவான் போதிக்கப்படும்போது அறிவடை வான். நீதிபரர் துன்மார்க்கர்களுடைய வீட்டைக் கவனித்துப்பார்க்கிறார் துன்மார்க்கர்களைத் தீங்கில் கவிழ்த்துப்போடுவார். ஏழையின் கூக்குரலுக்குத் தன்னுடைய செவியை அடைத்துக் கொள்ளு கிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான். இரகசியமாக கொடுக்கப்பட்ட வெகுமதி கோபத்தைத் தணிக்கும் மடியிலுள்ள லஞ்சம் கோபத்தை ஆற்றும். நியாயம்தீர்ப்பது நீதிமானுக்கு சந்தோஷமும், அக்கிரமக்காரர்களுக்கோ அழிவுமாகும். விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனிதன் செத்தவர்களின் கூட்டத்தில் தங்குவான். சிற்றின்பப்பிரியன் தரித் திரனாவான் மதுபானத்தையும் எண்ணெயையும் விரும்புகிறவன் செல்வந்தனாவதில்லை. நீதி மானுக்கு பதிலாக துன்மார்க்கனும், செம்மையானவனுக்கு பதிலாக துரோகியும் மீட்கும் பொரு ளாவார்கள். சண்டைக்காரியும் கோபக்காரியுமான பெண்ணுடன் குடியிருப்பதைவிட வனாந் தரத்தில் குடியிருப்பது நலம். வேண்டிய செல்வமும் எண்ணெயும் ஞானவானுடைய வீட்டில் உண்டு மூடனோ அதைச் செலவழித்துப்போடுகிறான். நீதியையும் தயவையும் பின்பற்றுகிறவன் நல்வாழ்வையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான். பலவான்களுடைய பட்டணத்தின் மதிலை ஞானமுள்ளவன் ஏறிப்பிடித்து, அவர்கள் நம்பின மதில்சுவரை இடித்துப்போடுவான். தன்னுடைய வாயையும் தன்னுடைய நாவையும் காக்கிறவன் தன்னுடைய ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான். அகங்காரமும் அகந்தையும் உள்ளவனுக்குப் பரியாசக்காரன் என்று பெயர், அவன் அகந்தையான கோபத்தோடு நடக்கிறான். சோம்பேறியின் கைகள் வேலைசெய்யச் சம்மதிக்காததால், அவனுடைய ஆசை அவனைக் கொல்லும். அவன் நாள்தோறும் ஆவலுடன் விரும்புகிறான் நீதிமானோ தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் கொடுப்பான். துன்மார்க்கருடைய பலி அருவருப்பானது; அதைத் தீயசிந்தையோடு செலுத்தினாலோ எத்தனை அதிகமாக அரு வருக்கப்படும். பொய்ச்சாட்சிக்காரன் கெட்டுப்போவான் செவிகொடுக்கிறவனோ எப்பொழுதும் பேசக்கூடியவனாவான். துன்மார்க்கன் தன்னுடைய முகத்தைக் கடினப்படுத்துகிறான் செம்மை யானவனோ தன்னுடைய வழியை நேர்ப்படுத்துகிறான். கர்த்தருக்கு விரோதமான ஞானமும், புத்தியும், ஆலோசனையும் இல்லை. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் வெற்றியோ கர்த்தரால் வரும். **- நீதிமொழிகள் 21: 1- 31**

***தொடரும்...***

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
·Loans
·Cash
·Debt Consolidation
·1st & 2nd Mortgage
·Home Renovation Loan
·Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1445 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 15, 2023

# ஸ்காபுறோவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பெற்ற Senthil Financial Services வரி மற்றும் நிதி ஆலோசனை வழங்கும் நிறுவனம்



கடந்த சனிக்கிழமை 9ம் திகதி ஸ்காபுறோவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பெற்ற **Senthil Financial Services** வரி மற்றும் நிதி ஆலோசனை வழங்கும் நிறுவனத்தின் ஆரம்ப விழாவில் அழைக்கப்பெற்ற பல முக்கிய பிரமுகர்கள். வர்த்தகப் பிரமுகர்கள். வாடிக்கையாளர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்து நிறுவனத்தின் ஸ்தாபகரும் பல துறை விற்பன்னருமான திரு .ஆறுமுகம் செந்தில்வடிவேல் அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் வாழ்த்திச் சென்றனர்.
(உள்ளே செய்தி 8ம் பக்கத்தில்)

# கனடா வாழ் கவிஞர் சந்திரமோகன் அவர்களின் "நந்தவனம்" ஒலி ஒளி கவிதைப் பேழை வெளியீட்டு விழா



கனடா வாழ் கவிஞர் சந்திரமோகன் அவர்களின்˙நந்தவனம்“ ஒலி ஒளி கவிதைப் பேழை வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை 9ம் திகதி பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலய கலாச்சார மண்டபத்தில் “மயிலைக்கவி“ கஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் குவிந்திருந்த இந்த கவிதைப் பெருவிழாவில் சபையோர் கூடியிருந்து விழா ஏற்பாட்டாளர்களையும் பேச்சாளர்களையும் உற்சாகப்படுத்தினர். “யுகம்“ வானொலி நிலைய அதிபர் கணபதி ரவீந்திரன் மற்றும் கவிஞர் சிவா சின்னத்தம்பி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். விழாத் தலைவர் “மயிலைக்கவி“ கஜன் தலைமையுரையாற்றினார்.
அடுத்து வெளியீட்டு உரையாற்றிய கவிஞரும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லோகேந்திரலிங்கம் அவர்கள் “நந்தவனம்“ கவிதைப் பேழையின் சிறப்புக்களையும் கவிஞரின் சமூகப் பார்வை மற்றும் வாழ்க்கை மீதான நேசிப்பு பற்றி எடுத்துரைத்து பின்னர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து அவரோடு அன்றைய கவிதைப் பேழையையும் ஒப்பிட்டு உரையாற்றி தனது உரையை நிறைவு செய்தார்.
(உள்ளே செய்தி 8ம் பக்கத்தில்)

# மார்க்கம் நகரில் இயங்கிவரும் Greensbrough Seniors Wellness Club தமிழ் பேசும் மூத்தோர் அமைப்பு நடத்திய நத்தார் தினக் கொண்டாட்டம்



நேற்று வியாழக்கிழமை 14ம் திகதி மாலை கனடாவில் மார்க்கம் நகரில் இயங்கிவரும் **Greensbrough Seniors Wellness Club** தமிழ் பேசும் மூத்தோர் அமைப்பு நடத்திய நத்தார் தினக் கொண்டாட்டம். சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
அமைப்பின் தலைவர் திருமதி செல்வா அருள்ரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த கொண்டாட்டத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.
மேற்படி அமைப்பு கடந்த 03-12-2023 அன்று நடத்திய வருடாந்த இராப்போசன விருந்தும் சந்திப்பு நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தவர்கள் மற்றும் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்கள் ஆகியோருக்கு நேற்று சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன
(உள்ளே செய்தி 10ம் பக்கத்தில்)



# "மக்களால் அங்கீகரிக்கப்படாத ஒரு ஜனாதிபதி அடுத்த தேர்தலில் வெல்வதற்காக இனவாதத்தை கையில் எடுத்து உரிமைக்காக போராடுகின்ற எம்மவர்களை அச்சுறுத்துகிறார்" *என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி*



இன்று மக்களால் அங்கீகரிக்கப்படாதவரும் மக்கள் செல்வாக்கும் இல்லாதவருமான ஒரு ஜனாதிபதி ஏதோ ஒரு வகையில் தான் அடுத்த தேர்தலில் வெல்வதற்காக இனவாதத்தை கையில் எடுத்து உரிமைக்காக போராடுகின்ற எம்மவர்களை கடுமையாக அச்சுறுத்தி தன்னுடைய மக்கள் மத்தியில் சிங்கள பௌத்த தன்மையைக் காட்டி தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டால் சிங்கள பௌத்தர்கள் தங்களுக்கு வாக்கு போடுவார்கள் என்ற பேர்வையில் மட்டக்களப்பில் எமது அமைப்பாளர் உட்பட 10 பேரை கைது செய்து செயற்படுகின்ற பல விடையங்களை அதனுடைய ஓர் அங்கமாக பார்க்கின்றோம்.13 வது திருத்தத்தில் ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குவதற்கு ஏக்கே ராஜ்சிய என்ற அரசியல் அமைப்பை சம்மந்தன் சுமந்திரன் போன்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாரித்து 2015 திணிக்க முற்பட்டு முடியாமல் போனதை கூட்டமைப்பின் ஒரு பங்காளி முகவர்களான உலகத் தமிழர் பேரவை மூலம் அரசே செய்யமுடியாத ஒரு காரியத்தை அவர்கள் செய்ய முயற்சிக்கின்றார்கள் அதனை நாங்கள் தோற்கடிப்போம் என நாடாளமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சூழுரைத்துள்ளார்.
(உள்ளே செய்தி 23ம் பக்கத்தில்)

# கனடா இலங்கை கணக்காளர்கள் சங்கம் நடத்திய 21வது ஆண்டு விழா



கனடாவில் சிறப்பாக இயங்கிவரும் நிபுணத்துவம் பெற்ற இலங்கை கணக்காளர்கள் சங்கம் அதன் 21வது ஆண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது.
டிசம்பர் 02 ஆம் தேதி ஸ்கார்பரோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் இடம் பெற்ற உரைகள். நடனங்கள். இசை நிகழ்ச்சிகள் மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வு ஆகியன சிறப்பாக இருந்தன.
(உள்ளே செய்தி 7ம் பக்கத்தில்)

416 283 6232
இப்பொழுது உங்கள் GEETHAVAANI RADIO வை தொலைபேசி அழைப்பில் கேளுங்கள்!

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker